ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19 ] சுக்ல௵ ஆவணி௴ [ஸஞ்சிகை 11

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥
[ ஸ்ரீ பாகவதம், 1-9-23 ]

ஸ்ரீ:

## இரண்டாந் திருவந்தாதி.

(உரையாசிரியர்:—ஸ்ரீ. உப. வித்வான் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்)

(ஸஞ்சிகை 10, பக்கம் 29. தொடர்ச்சி)

72. போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக் காங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும்போது உள்ளம்—போது
மணிவேங் கடவன் மலரடிக்கே செல்ல
யணிவேங் கடவன் பேராய்ந்து.

(இ—ள்) (ரிஷிகள் ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே உணர்ந்தெழுந்து போவது போல) வானரங்கள்-குரங்குகளானவை, போது அறிந்து-காலம் அறிந்து (உணர்ந்துபோய்), பூ சுனை புக்கு-(எங்கும் பூத்துள்ள நீர்) மலர்களையுடைய சுனைகளிலே புகுந்து, ஆங்கு-அவ்விடத்திலே, அலர்ந்த போது-(மிகவும் மலர்ந்து விடுதல் மொட்டாயிருத்த லன்றிக்கே அப்போது தான்) மலர்ந்த செவ்விப் பூக்களை, அரிந்து கொண்டு-பறித்துக்கொண்டு, ஏத்தும்-தோத்திரஞ் செய்துகொண்டு ஆச்சிரயிக்கும்: (ஆதலால்) உள்ளம்-மனமே! (நீயும்), போது

(பின்வாங்காமல் அந்தப் பரமனைச்) சேர்வாய்; (போந்தபின்), வேங்கடவன்-திருவேங்கட முடையானுடைய, பேர்-(சீலாதி குணங்களுக்கு வாசகமான) திருநாமங்களை, ஆய்ந்து-ஆராய்ந்து சொல்லிய வண்ணம், மணி வேங்கடவன்-நீலரத்நம்போலே ச்ரமஹரமான வடிவையுடையனான அந்தத் திருவேங்கட முடையானது, மலர் அடிக்கே-பூப்போல் மென்மையான திருவடிகட்கே, செல்ல-சென்று கிட்டுமாறு, போது-செவ்விப் பூக்களை, அணி-அழகுபெறச் சாத்தி ஆச்ரயிப்பாய்; (எ—று)

கீழ்ப் பாசுரத்தில் நித்ய ஸூரிகளும் அஸ்தாநே பயசங்கை கொள்ளும் விஷயம் எம்பெருமானென்றார்: அதுகேட்ட ஆழ்வார் திருவுள்ளம் ‘அப்படிப்பட்ட விஷயத்தை நம்மாற் கிட்டப்போமோ?’ என்று பிற்காலிக்க, ‘அந்த எம்பெருமான் திர்யக்குக்களும் ஆச்ரயிக்கும்படி ஸுலபனாக இருக்கும்போது நீயும் அப்பரமன் திருவடிகளை ஆச்ரயிக்கப் பார்’ என்று மநஸ்ஸைக் குறித்துச் சொல்லுகிறார். போது-மலரும் பருவத்தரும்பு. அணி வேங்கடவன் என்று எடுத்து, ஸம்ஸாரத்துக்கு அணிபோன்றவனான திருவேங்கட முடையானுடைய பேரை ஆய்ந்து, அந்த வேங்கடவனுடைய மலரடிக்கே செல்ல, உள்ளம்! போது; போதும் அணி என்று கூட்டி உரை கூறினுமாம்.

73. ஆய்ந்துரைப்ப னாயிரம்பே ராதிநடு வந்திவாய்
வாய்ந்த மலர்தூவி வைகலும்—ஏய்ந்த
பிறைக்கோட்டுச் செங்கட் கரிவிடுத்த பெம்மா
னிறைக்காட் படத்துணிந்த யான்.

(இ—ள்.) பிறை ஏய்ந்த கோடு-பிறைச் சந்திரனை யொத்த தந்தங்களையும், செம் கண்-சிவந்த கண்களையுமுடைய, கரி-(குவலயாபீட மென்ற) யானையை, விடுத்த-நிரஸித்த, பெம்மான்-பெருமையை யுடையவனான, இறைக்கு-ஸர்வ ஸ்வாமியானவனுக்கு, ஆட்பட-அடிமை செய்ய, துணிந்த-உறுதிகொண்ட, யான்-நான், வைகலும்-எல்லாக் காலங்களிலும், ஆதி-முதலிலும், நடு-இடையிலும், அந்திவாய்-முடிவிலும், வாய்ந்த-கிடைத்த, மலர்-புஷ்பங்களை, தூவி-(அடைவுகெட) ஸமர்ப்பித்து, ஆயிரம் பேர்-(அப்பரமனது குண சேஷ்டிதங்களைத் தெரிவிப்பனவான) ஸஹஸ்ர நாமங்களையும், ஆய்ந்து-மனத்தினால் அநுஸந்தித்து, உரைப்பன்-(வாய்படைத்த பயன்பெறச்) சொல்லா நிற்பேன்; (எ—று.)

எல்லாராலும் ஆச்ரயிக்கத்தகுந்த பெருமானது நிலையை யநுசந்தித்து, அவன் திருவடிகளிலே தாம் நித்ய கைங்கர்யம் பண்ணுவதாக உறுதி கொண்டபடியை யருளிச் செய்கிறார் இதில். இங்கு, ‘பிறைக்கோட்டுச் செங்

237



சட் கரிவிடுத்த பெம்மான்' என்று குவலயாபீட மென்ற யானையை நிரஸித்தமையைக் கூறியது, தமது விரோதியை அப்பரமன் நிரஸித்தமையைக் குறிப்பித்தற்கு என்பர். இனி, 'ஏய்ந்த பிறைக்கோட்டுச் செங்கட் கரிவிடுத்த பெம்மான்' என்பதற்கு-சேர்ந்த பிறைபோல வுள்ள தந்தங்களையும் செவ்விய (அழகிய) கண்களையுமுடைய கஜேந்த்ராழ்வானை (முதலை வாயினின்று) விடுவித்தருளின பெம்மான் என்று கூறின், அப்பரமன் ஆச்ரித விஷயத்தில் வாத்ஸல்ய முடையவனும் அவர்கள் ஆபத்தை விடுவிக்குந் தன்மையனென்பதைக் குறிப்பிக்கும்.

74. யானே தவஞ்செய்தே னேழ்பிறப்பு மெப்பொழுதும்
யானே தவமுடையே னெம்பெருமான்—யானே
யிருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழ னல்லேன் பெரிது.

(இ—ள்) எம்பெருமான்-(இந்த ஆத்ம வஸ்துவைத் திருவடிகளிலே அடிமை செய்யுமாறு) எம்முடைய நிருபாதிக சேஷியானவனே! ஏழ் பிறப்பும்-எல்லாப் பிறவிகளிலும், எப்பொழுதும்-(அப்பிறவிகளிலும்) எல்லா நிலைமைகளிலும், தவம் செய்தேன்-(உனது திருவடிகளிற் கைங்கர்யம் பண்ணுகைக்குக் காரணமான) தபஸ்ஸைச் செய்தவன், யானே-நானே; தவம் உடையேன்-(செய்த அந்தத்) தபஸ்ஸினாற் பெறக்கூடிய பயனைப் பெற்றவனும், யானே—; இரு-(லக்ஷணங்களிற் குறைவற்றிருக்கும்) பெருமையுடைய, (ஸர்வாதிகார மாகையால்) மிகவும் விலட்சணமான, தமிழ் மாலை-தமிழ்ப் பாமாலையை, இணை அடிக்கே-சேர்த்தி யழகையுடைய திருவடிகளுக்கு, (அந்தத் தவப் பயனால்), சொன்னேன்-சொல்லப் பெற்றவன், யானே-நானே; (நான்) பெருந் தமிழன்-சிறந்த தமிழறிஞன்; பெரிது நல்லேன்-மிகவும் நன்மை பெற்றவன்; (எ—று.)

கீழ்ப் பாசுரத்தில் தாம் எம்பெருமானுக்குக் கைங்கர்யஞ் செய்ய உறுதிகொண்டமையைக் கூறிய ஆழ்வார், இந்தப் பாசுரத்தில் அவனுக்குத் தக்கபடி தாம் வாசிக கைங்கர்யஞ் செய்யுமாறு ஸுக்ருதம் புரிந்திருத்தலை யநுஸந்தித்து, அதனால் தோன்றிய பெருமகிழ்ச்சியோடே பேசுகிறார். எம்பெருமானைக் கவிபாடப் பெற்றமையை நினைந்து அதனாற் பெருங்களிப்புக் கொண்டமையால், தம்மைப் 'பெருந்தமிழன்' என்கிறார். பெரிது நல்லேன்-"ஏதத் ஸாமகாயந்நாஸ்தே" என்று பரமபதத்திலே யிருந்து பாடியாடி அடிமை செய்வதற்கு உரிய நித்ய முக்தரைப் போலன்றி, இங்கே யிருந்து கவிபாடப் பெறுகையால் அவர்களிலும் மேம்பட்டவ னென்றபடி.

75. பெருகு மதவேழ மாப்பிடிக்கு முன்னின்
றிருக ணிளமூங்கில் வாங்கி—யருகிருந்த
தேன்கலந்து நீட்டுந் திருவேங்கடங் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை.

(இ—ள்) பெருகு மதப்-(திருமலையில் அருவி ள் பெருகுவது போலப்) பெருகுகின்ற மதநீரையுடைய, வேழம்-களிற்றி யானையானது, மா பிடிக்கு-(எந்த நிலையிலும் தன் ஆண்களிற்றை யேவிக் காரியங்கொள்ள வல்ல) சிறப்புடைய பெண் யானைக்கு, முன் நின்று-('நான் இவ்விடத்துக்குச் செய்யக்கடவ பணிவிடைகளைப் பணிக்கலாகாதோ' என்ற குறிப்புத் தோன்ற வினயத்துடன்) முன்னே வந்து நின்று,—இரு கண் இள மூங்கில்-இரண்டு கணுக்களேறி (அந் நிலைக்கேற்பவும் முற்றனவு இராமல்) இளையதாயிருக்கிற மூங்கிற் குருத்தை, வாங்கி-(அதன் செவ்வி குலையாதபடி மிக்க கருத்தோடு) மெல்ல எடுத்து, அருகு இருந்த-சமீபத்தில் (மலை முழைஞ்சுகளிலே கூட்டிலே) நிறைந்துள்ள, தேன்-தேனிலே, கலந்து-(மூங்கிற் குருத்தும் தேனும் தம்மிலே ஒரு நீராம்படி) தோய்த்து, ('உனக்கு வேண்டுவார்க்குக் கொடாய்' என்று பிடயானை அநாதரித்திருக்கவும்), நீட்டும்-(இதனை யங்கீகரிக்கவேணு மென்று) அன்போடு கொடுக்கப்பெற்ற, திரு-சிறப்பையுடைத்தான, வேங்கடம்-திருமலையே, வான் கலந்த வண்ணன்-மேகத்தோடு ஒத்த வடிவையுடைய எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற, வரை கண்டீர்-மலையாகும் (எ—று.) கண்டீர்-முன்னிலையசை.

'பெருந்தமிழன் : நல்லேன் பெரிது' என்று கீழ் ஆழ்வார் தம்மைப் பாராட்டிக் கூறியதனால் எம்பெருமானுக்கு, 'பெருமதிப்பரா யிருக்கிற நீர் நம்மைப்பற்றி ஒரு கவிசொல்லிக் காணீர்' என்று திருவுள்ளமாக, அத்திருவுள்ளத்தை யடியொற்றி இக்கவியை விண்ணப்பஞ் செய்கின்றார் என்க. 'மாப்பிடி' என்றமையால், த்பாநயுக்தர் ஸர்வேச்வரனை வசீகரிக்குமாபோல ஆண்யானையை வசீகரிக்கும் பிடியின் தன்மையும், 'முன்னின்று' என்றமையால், மாணவகர் ஆசிரியரை யநுவர்த்திப்பதுபோலக் களி ்றியானை மதச்செருக்கால் அறிவுகெட்ட நிலையிலும் பிடயானையை யநுவர்த்திகுந் தன்மையும் வெளிப்படுத்தப்பட்டன.

76. வரைச்சந்த னக்குழம்பும் வான்கலனும் பட்டும்
விரைப்பொலிந்த வெண்மல் லிகையும்—நிரைத்துக்கொண்
டாதிக்கண் ணின்ற வறிவ னடியிணையே
யோதிப் பணிவ துறும்.

239



(இ—ள்) வரை சந்தனம் குழம்பும்-(அப்பிரானுக்கு ஏற்றதான) மலையில் தோன்றிய சந்தனக்கட்டையை யரைத்துச் சமைத்த சந்தனக் குழம்பும், வான் கலனும்-சிறந்த (பெருவிலையுள்ள) ஆபரணங்களும், பட்டும்-(அவனது திருவரைக்கு ஏற்றதான) பட்டாடையும், விரை பொலிந்த வெண் மல்லிகையும்-நறுமணத்தால் விளங்குவதாய் (க்கண்கவரும்) வெண்மை நிறத்தைக் கொண்ட மல்லிகை மலரும், (ஆகிய இவற்றை), நிரைத்துக்கொண்டு-வரிசையாக எடுத்துக்கொண்டு,—ஆதிக்கண் நின்ற அறிவன்-ஸ்ருஷ்டி காலத்திலே (யாவற்றுக்குங் காரணனாய் நின்ற) ஞானரூபியாகிய எம்பெருமானுடைய, இணை அடியே-ஒன்றையொன்று ஒப்பதான திருப்பாதங்களையே, ஓதி-வ்யாயாரத் துதித்து, பணிவது-தலைபார வணங்குவது, உறும்-(இவ்வாத்மாவுக்கு) ஏற்ற செயலாகும்; (எ—று.)

கீழ்த் தாம் செய்தது போல, வாசிகமாகக் கவி பாடிப் பெருமானை யுசப்பிப்பதே யல்லாமல் அடிமை செய்தற்கேற்ற பொருள்களைத் தேடிக் கொண்டுவந்து வகுத்த சேஷியான அவன் திருவடிகளிலே அடிமைசெய்வதுவே இந்த ஆத்மாவுக்கு நன்மை பயப்பதாகு மென்கிறார் இதில். அறிவன்-தன் திறத்தில் இந்தச் சேதநன் செய்த அல்பாநுகூல்யத்தையும் எப்போதும் நினைத்திருக்கும் ஸர்வஜ்ஞன்.

77. உறுங்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமனற் பாதம்
உறுங்கண்டா யொண்கமலந் தன்னால்—உறுங்கண்டாய்
ஏத்திப் பணிந்தவன்பே ரீரைஞ்ஞூ றெப்பொழுதுஞ்
சாற்றி யுரைத்தல் தவம்

(இ—ள்.) நல் நெஞ்சே-நல்ல மனமே! உத்தமன்-புருஷோத்தமனுடைய, நல்-அழகிய, பாதம்-திருவடிகள், உறும்-மிகச் சிறந்ததாங் காண்; ஒள் கமலம் தன்னால்-அழகிய தாமரைப்பூவாலே, (அந்தப் பரமன் திருவடிகளை யாச்சிரயித்தல்) உறும் கண்டாய்-தக்க செயலாகுங்காண்; (அந்தப் பரமனை) ஏத்தி-ஸ்துதித்து, பணிந்து-(தலையாலே) வணங்கி, அவன்-அவனுடைய, ஈர் ஐஞ்ஞூறு பேர்-(குணசேஷ்டிதங்களைத் தெரிவிப்பனவான) ஆயிரந் திருநாமங்களையும், எப்பொழுதும்-எந்தக் காலத்திலும், சாற்றி உரைத்தல்-எங்கும் பிரசித்தமாம்படிச் சொல்லுகையாகிற, தவம்-தபஸ்ஸானது, உறும்-ஏற்றதாகும்; (எ—று.)

எம்பெருமானை ஆச்சிரயிப்பதில் ஒருப்பட்ட ஆழ்வார், அது தமக்கு இனியதாயிருக்கையாலே, எம்பெருமானை அநுபவிக்கும் நிலையை விடஸாதந நிலையிற் பிறக்கும் இனிமையே போது மென்கிறார் இதில். தமக்கு

240



முன்னே தம் நெஞ்சு எம்பெருமானிடத்துப் பதறிச் செல்வதால், 'நல் நெஞ்சே!' என்கிறார். ஸம்ஸாரிகள் விமுகரான நிலையிலும் அவர்களை நோக்கியிருந்து, இப்போது நாம் அவனைக் கிட்ட அதனைத் தன்பேறாக நினைத்துப் பகவான் இருப்பனாதலால் 'உத்தமன்' என்கிறது. பாதத்துக்கு நன்மை-யோக்கியர் அயோக்கியர் என்ற வேறுபாடின்றி எல்லாரும் பற்றலாம்படியிருக்கை. இரண்டா மடியில் எழுவாய் வருவிக்கப்பட்டது. எம்பெருமான் கருத்தாலே ஏத்தி ஆயிரம் பெயரைச் சாற்றி யுரைத்தலைத் தவமென்றது, எம்பெருமான் கருத்தாலே. ஐஞ்ஞூறு என்ற தொடரில், நகரத்துக்கு ஞகரம் போலியாக வந்தது. கண்டாய்-முன்னிலையசை.

78. தவஞ்செய்து நான்முகனே பெற்றான் றரணி
நிவந்தளப்ப நீட்டிய பொற்பாதம்—சிவந்ததன்
கையனைத்து மாரக் கழுவினான் கங்கைநீர்
பெய்தனைத்துப் பேர்மொழிந்து பின்.

(இ—ள்.) தரணி-பூமியை, நிவந்து-வளர்ந்து, அளப்ப-அளத்தற்காக, நீட்டிய-நீட்டின, பொன் பாதம்-அழகிய திருவடிகளை, கங்கை நீர்-(தர்ம ஸ்வரூபமான) கங்கா ஜலத்தை, பெய்து-சொரிந்து, அனைத்து பேர்-(எம்பெருமானுடைய) எல்லாத் திருநாமங்களையும், மொழிந்து-(வாய் படைத்த பயனை யடையுமாறு) சொல்லி, தன்-தன்னுடைய, சிவந்த—, கை அனைத்தும்-எல்லாக் கைகளும், ஆர-(தாம் தோன்றிய) பயன் பெறுமாறு கழுவினான்-விளக்கினான்; (அவ்வண்ணம் திருவடிகளை விளக்கப்பெற்ற பின்பு), தவம் செய்து-(பகவந் நாம ஸங்கீர்த்தநமாகிற) தவத்தைக் குறைவறச் செய்து, நான்முகனே-சதுர்முகனான பிரமதேவ னொருவனே, பெற்றான்-பயன் பெற்றவனானான்; (எ—று.)

'சாற்றியுரைத்தல் தவம்' என்றார் கீழ்: அப்படிப்பட்ட தவத்தை அநுஷ்டித்து ஸர்வேச்வரன் திருவடிகளை வருத்த 'மில்லாமற் பெற்றான் நான்முகனென்று, அத்தவத்தால் விளையும் பயனை உதாரண முகத்தால் விளக்குகிறார் இதில். இந்தச் சேதனன் இனியன செய்ய, எம்பெருமான் அவற்றைத் தவமென்று கொள்வான்: இங்ஙனம் அவன் கொள்வா னென்பதை "வணக்குடைத் தவநெறி" என்று ஆழ்வார் அருளிச் செய்திருத்தல் காண்க.

79. பின்னின்று தாயிரப்பக் கேளான் பெரும்பணைத்தோள்
முன்னின்று தானிரப்பாண் மொய்ம்மலராள்—சொன்னின்ற
தோணலந்தா னேரில்லாத் தோன்ற லவனளந்த
நீணிலந்தா னத்தனைக்கு நேர்.

(இ—ள்) பின் நின்று-பின்தொடர்ந்து நின்று, தாய்-பெற்ற தாயான கௌசலையானவள், இரப்ப-('வனம்போகேல்' என்று) வேண்டிக்கொள்ளவும், கேளான்-(அத்தைக்) கேளாதவனானன் (சக்கரவர்த்தித் திருமகன்); (அதுக்கு மேலே அவனை), பெரு பணை தோள்-நீண்டு பருத்த தோளையுடைய, மொய் மலராள்-அழகிய தாமரைப் பூவை இருப்பிடமாக வுடைய இலக்குமியின் அம்சமான சீதாபிராட்டி, தான்—, முன் நின்று-முற்பட்டு நின்று, இரப்பாள்-(தன்னையும் உடனழைத்துக்கொண்டு காட்டுக்குச் செல்லவேணுமென்று) வேண்டுபவளானாள்; (இப்படிப்பட்டவனாகி), சொல்-இராமாயண காவியத்திலே, நின்ற-பிரதிபாதிக்கப்பட்டுள்ளவனும், தோள் நலம் நேர் இல்லா-தோளழகிலும் சௌகுமார்ய குணத்திலும் தன்னை யொப்பாரில்லாதவனுமான, தோன்றல்—சக்கரவர்த்தித் திருமகனானவனுடைய, அத்தனைக்கும்-அந்த எல்லாக் குணங்கட்கும், அவன் அளந்த நீள் நிலம் தான்-அந்த வாமன னளந்த நீண்ட பூமியே (அந்த வாமனன் பூமியை யளந்துகொண்ட செயலே), நேர்-ஒப்பானதாகும்; (எ—று.)

தாயின் மொழியை மறுத்து மனைவியின் வேண்டுகோளையும் கருதாது தன் சௌகுமார்யத்தையும் விரும்பிப் பாராமல் போகிற காட்டின் கொடுமையையும் கடைக்கணியாமல் பித்ருவசன பரிபாலனத்தையே மதித்து வளநாடு கைவிட்டுக் காட்டை யுகந்த சக்கரவர்த்தித் திருமகன் செயல்களுக்கு, 'இடங்கை வலம்புரி நின்றார்ப்ப' என்கிறபடியே அநுகூலரிற் சிறந்தவரான நித்ய சூரிகளின் வயிற்றெரிச்சலைப் பொருட்படுத்தாது தன் சௌகுமார்யத்தையும் பாராட்டாமல் அளக்கப்போகிற காடும் ஓடையுமான பூமிப் பரப்பின் கொடுமையையும் அசுர பிரகிருதிகளான நமுசி முதலியோர் புரியுந் தீங்கையும் பாராமல் ஆச்ரிதனான இந்திரனது வேண்டுகையைத் தலைக்கட்டுகைக்காகக் கல்லுங் காடுமான வையத்தை யளந்துகொண்ட ஸ்ரீவாமன மூர்த்தியினுடைய செயலானது ஒத்துள்ளதென்றவாறு. கீழ் வாமனாவதாரம் ப்ரஸ்துதமாகையாலே அதை யொட்டி ஸ்ரீராமாவதாரத்தையும் இதில் அநுபவிக்கிறார். பின்னின்று தாயிரப்ப-'நான் ஏகபுத்ரை; நான் உம்மைப் பிரிந்து தரித்திருக்க வல்லேனல்லேன்; நீ காட்டுக்குப் போகவேண்டா' என்று பிரார்த்திக்க, முன்னின்று தானிரப்பாள் மொய்ம் மலராள்-பூவை வாழிடமாகக் கொள்ளும்படி நிரதிசய ஸுகுமாரையான பெரிய பிராட்டியார் 'கருமுகை மாலையைச் செவ்வி பெறுத்த'வென்று நெருப்பிலே யிடுவாரைப்போலே இந்த அதிசுகுமாரமான திருமேனியைக் கொண்டு காடேறப் போகிற இன்று உம்மைப் பிரிந்திருக்கமாட்டேன்; உமக்கு முன்னே போகக்கடவேன் என்று இரப்பவளாக வொன்க,

80\. நேர்ந்தே னடிமை நினைந்தே னதோண்கமல
மார்ந்தேனுன் சேவடிமே லன்பா—யார்ந்த
வடிக்கோலங் கண்டவர்க் கென்கொலோ முன்னைப்
படிக்கோலங் கண்ட பகல்.

(இ—ள்.) அடிமை-(தேவரீரது திருவடிகளில் என் ஸ்வரூபத்துக்கு ஏற்ற) கைங்கரியத்தைச் செய்வதற்கு, நேர்ந்தேன்-மனப்பூர்வமாக உடன் பட்டேன்; (அதற்கு ஏற்ப) ஒண் கமலம் அது-அழகிய தாமரைப் பூப் போலிருக்கிற அந்தத் திருவடிகளை, நினைந்தேன்—; அன்பு ஆய்-அவ்வண் ணம் (நினைந்ததனால் பெருகித் தோன்றுகின்ற) அன்பை யுடையவனாய், உன் சே அடிமேல்-(சாஸ்திரங்களால் வகுக்கப்பட்ட சேஷியான தேவரீருடைய) சிவந்த திருவடிகளில், ஆர்ந்தேன்-(பிரிக்கவொண்ணாதபடி) பொருந்தினேன்; அடி ஆர்ந்த கோலம்-திருவடிகளின் நிரம்பிய அழகை, கண்டவர்க்கு-தரிசித்து அனுபவித்தவர்கட்கு, முன்னை-இதுக்கும் காரணமான, படி-திருமேனியின், கோலம்-அழகை, கண்ட-(முழுநோக்குச் செய்து) அநுபவிக்கப் பெற்ற, பகல்—, என் கொலோ-எப்படியாயிற்றோ? (எ—று.)

'தேவரீரது அடிமையை நேர்ந்து தேவரீர் திருவடிகளை நினைந்த மாத்திரத்தில், நானே அன்புபெருக அத்திருவடியோடு இரண்டறப் பொருந்தியிருந்தேனே; தேவரீர் திருமேனி முழுதுங் கண்டு ஈடுபட்டவர் எப்படியா யிருப்பரோ?' என்று ஈடுபட்டுக் கூறியவாறு. இனி, 'ஆர்ந்த வடிக்கோலம் கண்டவர்க்கு' என்பது இவ்வாழ்வாரையே குறிப்பதாகக் கொண்டு, நான் திருவடிகளினழகில் ஈடுபட்டபடி கண்டால், முன்பு இவ்வடி வழகைக் கண்டு அநுபவிக்கப் பெற்றவர்கள் என்படாரோ என்றுமாம். அன்றி, ஆர்ந்த-(உலகமெங்கும்) நிரம்பிய, அடி கோலம்-(திரிவிக்கிரமனான தேவரீரது) திருவடியின் அழகை, காண்டவர்க்கு காணப் பெற்றவர்கட்கு, முன்னை-முன்புள்ள, படி கோலம்-இயற்கை யொப்பனையை, கண்ட—, பகல்-போது, என் கொலோ-என்னுவது கொல்லோ என்று கூறி, திரிவிக்கிரமனான தேவரீருடைய திருவடிகளை நாங்கள் தரிசிக்கப்பெற்ற காலத்துக்கு, முன்பு தேவரீரது ஸ்வாபாவிகமான அழகைக் கண்ட காலம் ஒவ்வாது எனக் கருத்துக் காணினுமாம்.

# ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

(ஸ்ரீ. உப. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர்)

[ஸஞ்சிகை 10, பக்கம் 277 தொடர்ச்சி]

புருஷனுடைய தர்ம பத்நியாகிய புத்தி என்பவள் தன் புருஷனுக்கு உந்மாதம், ப்ரமாதம் முதலியன வரும்போது ஏன் தன் பர்த்தாவுக்கு நல்ல புத்தியைத் தெரிவிக்கக் கூடாது என்று ஸுமதி கேட்கிறாள். 'ஹிதாய ஸ்வாம் ந பிக்ஷயே' என்று கணவனுக்கு நல்மதியை விஜ்ஞாபநஞ் செய்யவேண்டியது உத்தம வதூக்களின் ஸமயம். புருஷனுடைய தர்மபூத ஜ்ஞாநம் அவனுக்குத் தர்ம பத்நியாகிறது. அதைத்தான் புத்தி என்று சொல்லுவது. ரத்நத்திற்குக் காந்திபோல ஜீவரத்நத்திற்குப் புத்தி ப்ரபா தேவியாவாள். ஸுமதியின் கேள்விக்கு மஹாராஜர் பதில் சொல்லுகிறார். புத்தி தானே ப்ரகாசிக்கும் ஸ்வயம் ப்ரகாச ஸ்வபாவத்தை உடையவளானாலும், அநேகமாய்த் தூங்குகிறவளைப்போல் இருக்கிறாள். அவளை 'ஸுப்தப்ராயா' என்று கூறியதால் தூக்கத்தில் எப்படிப் புத்திக்கு ப்ரஸரம் கிடையாதோ அதுபோல் என்றும் அர்த்தம் த்வநிக்கிறது.

> "யதூ்ஸ உ௵ஈ மதவதி ஈவள வதிநீவ வூஸ வூா
> ஊாதாகாஈா ஸுஊவீ நிஹரதா வதஉதெ பஸிஈஂபா।
> ஊயாயொமாநூவிநிதஈஅள வஞ்ஹெ தூவூயீவா
> ஈாஹ மூஹெ் தூஹிநகிஈணெ நிஷ்ஹா யாதிநீவ।"

பர்த்தாவாகிய புருஷன் ஒரு விபத்திலகப்பட்டுத் தன் ஒளி அற்று வருந்தும் பொழுது, அவனுடைய காந்தையாகிய புத்தி தன் பர்த்தாவின் அவஸ்தையை உத்தேசித்துத் தானும் ஒளியற்று திகைத்திருக்கிறாள். இந்த விஷயத்தில் இரண்டு த்ருஷ்டாந்தங்கள். பத்மிநி என்கிற தாமரை ஓடைக்கு ஸூர்யனைப் பதி என்று கவிகள் சொல்லுவர். பதியாகிய ஸூர்யனுடைய ஸாந்நித்யத்தாலும் கர ஸ்பர்சத்தாலும் தாமரை ஓடையிலுள்ள பத்மங்களாகிய முகங்களுக்கு மலர்ச்சியும் மகிழ்ச்சியும் உண்டாகும். ஸூர்யனுக்கு அஸ்தமயம் வந்து விலகியிருக்கும் நிர்ப்பந்தம் வந்த பொழுது பத்மிநியிலுள்ள பத்மங்கள் மூர்ச்சாக்ராந்தங்கள்போல் வாடி மூடியிருக்கும். பத்மிநி என்கிற சப

தத்தால் உத்தம ஜாதியான பதிவ்ரதா ஸ்த்ரீ என்கிற அர்த்தமும் த்வநிக்கிறது. பர்த்தாவின் அவஸ்தைக்கு அநுகுணமான சோகத்தை வஹிப்பது உத்தம ஸத்ஸ்வபாவம். இங்கே ப்ரஸுப்தா என்று தூக்கத்தைச் சொல்லும் சப்தத்தால், அதைப்போன்ற அவஸ்தையான மூர்ச்சையையும் கொள்ளலாம். மூர்ச்சை என்னும் அவஸ்தை தூக்கத்தில் பாதி சேர்ந்ததென்றும், அந்திம ப்ரயாணத்தில் பாதி சேர்ந்த தென்றும், அது அர்த்த ஸம்பத்தி என்றும் சொல்லுவார்கள். பர்த்தாவுக்கு நேர்ந்த விபத்து சில காலம் மட்டும் உள்ளதாயிருந்தால் பத்நியின் அவஸ்தை தூக்கத்தை ஒத்ததாய் இருக்கவும், அந்த விபத்து ஆத்யந்திகமாயிருந்தால் பத்நியின் மூர்ச்சாவஸ்தை கடைசி அவஸ்தையாகப் போய்விடவும், இந்த ப்ரகாரமாய் இரண்டு விதமான வழிக்கும் இடங்கொடுப்பதா யிருக்கும் பதிவ்ரதையின் சோக மூர்ச்சை என்றும் த்வநியால் காட்டப்படுகிறது. 'ப்ரஸுப்தா, ஜாதநாகாரா' என்கிற பதங்களால் 'பரிக்ஷதகௌஸ்துபச்ரியாம். ஸரஸாம் ஸுப்த பத்மாநாம் ப்ராதர்தீர்க்கிகாமிவ' என்கிற குமார ஸம்பவ ச்லோகம் ஸ்மரிதம். அங்கே ஸூர்யோதய காலத்தில் அதற்கு முன் ஸூர்யனுடைய பிரிவால் வாடியிருந்த முகங்களாகிற பத்மங்களையுடைய ஓடைகள் பத்மங்களாகிய முகங்களின் மலர்ச்சியை அடைவதைச் சொல்லிற்று. இங்கே பிரிவில் முக வாட்டத்தைக் சொல்லுகிறது. 'ஓ ஸுமுகீ!' என்று இங்கே ஸுமதியைப் பார்த்து 'ஜாதநாகாரா' என்பதற் கடுத்தாற்போல் ஸம்போதநம் செய்வது மிகவும் அழகு. 'புத்தி தன் நாயகனைப் பிரிந்தால் முக வாட்டத்தை அடையமாட்டாளா? நீ என்னுடன்கூட இருப்பதனால்தானே மலர்ந்த தாமரை போன்ற முகத்தையுடையவளா யிருக்கிறாய். புத்தியானவள் நிப்ருதமாய் இருக்கிறாளென்று சொல்வதனால்' புத்தி என்கிற தர்மத்திற்குத் தூக்கம் முதலிய எந்த அவஸ்தைகளிலும் உச்சித்தி கிடையாது. அதற்கு அழிவென்பதே இல்லை. அது சலநம் என்கிற வ்யாபார மில்லாமல் நிச்சலமாயும் விஷய ப்ரகாசநம் செய்யாமலும் இருக்கிறது. புருஷனும் புத்தியும் விவேகாதிகளுக்குத் தந்தையும் தாயுமாவார். இரண்டாவது பாதியில் புருஷனை ராஹுவின் க்ரஹணத்திற்குள் அகப்பட்டு ஒளியை இழந்த சந்த்ரனுக்கும், புத்தியை ராத்ரிக்கும் ஒப்பிடப்படுகிறது. ஸூர்யனும் சந்த்ரனும் ஜ்யோதிர் மூர்த்திகளாகையால் ஸ்வயம் ப்ரபனை ஆத்மாவுக்கு த்ருஷ்டாந்தங்களாகக் கூறியது. 'அஸ்தமிதே சந்த்ரமஸ்யஸ்தமிதே அம்ஸூர்வி' என்று உபநிஷத்து கூறியபடி அந்த இரண்டு ஜ்யோதிஸ்ஸுக்களுக்கும் மேற்பட்டது ஸ்வயம் ஜ்யோதிஸ்ஸான புருஷ ஜ்யோதிஸ்ஸு. அந்த ஜ்யோதிர் மண்டலங்களுடைய ப்ரபையை விடச் சிறந்தது புருஷனுடைய புத்தி ப்ரபை. ஸூர்ய த்ருஷ்டாந்தத்தில் ஸூர்யனுக்கும் (அதாவது ஸூர்ய மண்டலத்துக்

கும்) பத்நிக்கும் ஸாக்ஷாத்தாக ஸாமீப்யம் எப்பொழுதும் கிடையாது. ஸூர்யனுடைய கிரண மூலமாகத்தான் இரண்டுக்கும் ஸந்நிகர்ஷம். இந்தக் குறைவு ராத்ரி சந்த்ர த்ருஷ்டாந்தத்தில் கிடையாது. ராத்ரிக்கும் சந்த்ரனுக்கும் ஸம்பந்தம் நேராய் உளது. ஆத்மாவுக்கு ஒளிகுறைவது மாயா யோகத்தால். மாயை என்பது மறப்பை உண்டுபண்ணும் இருட்டுமயமான ப்ரக்ருதி ஸம்பந்தம். மாயையின் பிடிப்பினால் புருஷனுக்கு ஒளி மழுங்கவே, அவனுடைய புத்திபாகிற ப்ரபையும் ஒளி குன்றுகிறது. ராஹு என்பது சாயா க்ருஹம். சந்த்ரன் ராஹுவால் பிடிக்கப்பட்டு ஒளி மழுங்கும் பொழுதும் அவனை விட்டுப் பிரியாமலே ராத்ரியும் இருக்கிறாள். இருவரும் பிரியாமல் கூட இருக்கையிலேயே கணவன் ஒளி குன்ற பத்நியின் ஒளியும் குன்றுகிறது. இதுதான் ஸம்பூர்ணமான த்ருஷ்டாந்தம். புத்தி என்பவள் ஆத்மாவின் தர்மமானபடியால் தர்மியை ஆச்ரயிக்காமல் அவனை விட்டுப் பிரிந்து தூரத்தில் தனியாய் இருக்க முடியாது. முதல் த்ருஷ்டாந்தத்திலுள்ள குறைவுகளை நீக்க இரண்டாவது த்ருஷ்டாந்தம், 'அத்ர ஏவ ஸோஹோராத்ரேவாஸ வ்ர ஏஷஅஜ' என்கிற உபநிஷத் வாக்யம் இங்கே ஸ்மாரிதம். இந்த ச்லோகத்தின் முன் பாதியை அநுஸரித்து அபிநவபட்ட பாண ரென்னும் கவி பார்வதி பரிணய நாடகத்தில் ''வ்யாயஸ்ய ப்ரணயம் விவஸ்வதி மதெ ஜெஸாஜுஸம் வஹீநீ................ஸ்ரூயதஜொஜாநதா। ஸஷ்யாவக்ஷ்வதீ விஷெஷவஷிஷ ஊ ஊராக்ஷஊமாவதீ ஸதாவிஹ்ரஹவெயெவ...............தீவ்ரம் தவஸ்தவ்யதெ॥'' என்று சொல்லியிருக்கிறார். அந்தக் கவி, ஸ்வாமிகாலத்துக்குச் சுமார் 150 வருஷத்துக்குப் பிறகு இருந்தவர். அவர் இந்த நாடகத்தை நன்றாய் அநுபவித்தவ ரென்பது வேம பூபால சரித்ர மென்கிற அவருடைய க்ரந்தத்திலிருந்து தெரியவரும்.

புத்திக்கும் புருஷனுக்கும் பிரிந்த ஸ்திதி கிடையாதென்கிற பாவம் இதற்கடுத்தாற்போல் 'புத்தி ஸஹிதமான புருஷனுடைய பந்த தசையானது மிகவும் பரிதாபம்' என்று ஸுமதி சொல்லுவதாலும் வ்யக்தமாகிறது. புத்திப்ரகாச மிருந்தால் பந்த தசைக்கு இடமில்லை. புத்தியால் பந்தத்வம் நீங்கும். 'இப்படிப் பந்தனைத் திண்டாடும் புருஷனுக்கு விஸ்தாரமாக மோக்ஷாகமத்தை ப்ரகாசப்படுத்தி என்னுடைய சங்கையைத் தீர்க்கவேணும்' என்று ஸுமதி ப்ரார்த்திக்கிறாள். மோக்ஷாகமம் என்பதற்குப் புருஷனுக்கு மோக்ஷம் வருவதை என்றும், மோக்ஷம் வரும் வழியைச் சொல்லும் ஆகமம் (அதாவது சாஸ்த்ரத்தையும்) என்றும் இரண்டு விதமாயும் அர்த்தம் கொள்ளலாம். இந்த முதலாவது அங்கத்தில் அத்யாத்ம சாஸ்த்ரத்தில் ஸித்த ஸ்வரூபமான ப்ரஹ்மத்தைப்பற்றி உள்ள முக்யமான விஷயங்களைக் கூறுகிறார். ப்ரளயத்தையும் அபிஸம்வேசத்தையும் சேர்த்துச் சொல்லும் ஜந்மாதி லக்ஷணம்

மோக்ஷ ப்ரதத்வத்தையும் முக்யமாகக் கூறுகிறது. எது காரணமோ அதுதான் த்யேயம்; அதுதான் மோக்ஷ ப்ரதம். ஸர்வ ப்ரவ்ருத்திகளுக்கும் காரணமாயிருப்பது நம்முடைய மோக்ஷ ப்ரவ்ருத்தி. ஆரம்பம் முதல் முடிவு வரையில் அது ஸகல ப்ரவ்ருத்திகளுக்கும் காரணமாகும் என்கிற அம்சத்தை இங்கே விஸ்தாரமாய் உபபாதிக்கிறார். இந்த நாடகத்தில் பலமாகிய மோக்ஷம் அதைச் செய்விக்கும் சேஷியான ஈச்வரனுக்கே முக்ய பலம். '[illegible]' என்கிற ந்யாயத்தை அநுஸரித்த ஈச்வரன் மோக்ஷ பலத்தில் ப்ரதாந பலி யானபடியால், அது விஷயமான ப்ரவ்ருத்தியில் ஆரம்பம் முதல் அவன் ப்ரதாநமாக நின்று க்ருஷி செய்யவேண்டியது ந்யாய்யம். அவனே தன் புத்தியால் ஒரு வ்யாஜத்தைக் கல்பித்துக்கொண்டு நம்மை மோக்ஷ மார்க்கத்திற்குக் கொண்டுவர ஸகல க்ருஷியையும் செய்கிறான். '[illegible]' என்று கூறுகிறார். முன்பு ப்ரபஞ்ச வ்யாபாரங்களில் ஈச்வர ஸம்மதமாயும் சேதநனுடைய புத்தியினால் கடிதமான ஸ்வாதந்த்ரியமிருப்பதால் சேதநனுக்கு ப்ரவ்ருத்திக்குத் தடங்கலில்லை என்று கூறப்பட்டது. அந்தப் பதங்களுக்குப் பதிலாக இங்கே எல்லையில்லாத ஸஹஜ காருண்யத்தால் ஏற்பட்ட ஸ்வதந்த்ரமான ஈச்வரனுடைய தயை என்கிற இச்சா சக்தியானது, சேதநனுடைய ஏதோ ஒரு ஸுக்ருத மென்கிற வ்யாஜத்தைச் சாக்காகக்கொண்டு தானே ஆரம்பம் முதல் வேண்டிய ஸம்விதாநங்களைச் செய்வித்துக்கொண்டு தானே ஸந்தோஷப்படுகிறது. ஆரம்பம் முதல் இந்த ஸம்விதாநம் நடக்கும் வழியைச் சில ச்லோகங்களால் வர்ணிக்கிறார். ஒன்றுமறியாத ஒரு குழந்தையை அநேகம் பிசாசங்கள் பிடித்துக்கொண்டால் எப்படி அது அங்கு மிங்கும் இழுத்து ஆட்டப்படுமோ, அப்படியே காமம் மத்ஸரம் அஹங்காரம் முதலிய பிசாசங்களால் பிடித்துக்கொள்ளப்பட்ட சேதநன் ஆட்டிவைக்கப்படுகிறான். மந்த்ர ஸித்தியுடைய மாந்த்ரிகனுடைய பார்வையினால் எப்படி பிசாசக்ரஹம் நீங்கி ஸ்வாஸ்த்யம் வருமோ, அப்படியே வேதங்களில் ஸித்தமான ஈச்வரனுடைய கடாக்ஷத்தால் நல்வழியில் இறங்க இடமுண்டாகும். அதனால் உயர்ந்த மாசற்ற ஆசார்யனுடைய கடாக்ஷாம்ருதத்தால் அவன் ஸ்தபிதனாவான். ஸ்வர்க்க வாஸத்திலும் அவனுக்கு அங்கே ஸ்வாதந்த்ரியமின்மையாலும், எப்பொழுது பாதம் (அதாவது விழுகை) வருகிறதோ வென்கிற பயம் முதல் முதற்கொண்டு தொடர்ந்து வருவதாலும், அதில் நிர்வ்ருதி என்கிற ஸுகம் இருக்கமாட்டாது.

" ஸ்வயா ஜந்யுஷ: ப்ரத்யா விபிவதிஹ யஷ்டா ஸ்வயமஹம்
விதத்தே ஆக்ஷிப்ஜ்யம் ஸமரமகவேதாயம் ப்ரணமண: ।
அக்ஷரார்த்தைரேஷ்யோ பவதி பகவாநாத்மஹவிஷ:
பரார்த்தபுந்ஸோ முக்திம் பஜதி விமலக்ஷேத்ரநிமல: ॥ "

இந்த ச்லோகம் பட்டநாராயண கவி செய்த வேணீ ஸம்ஹார நாடகத்தில் உள்ள அடியில் கண்ட ச்லோகத்திற்கு எதிர்த்தட்டாகச் செய்யப்பட்டது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

" சத்வாரோ வயம்ருத்விஜ: ஸ பகவாந் கர்மோபதேஷ்டா ஹரி:
ஸங்க்ராமாத்வரதீக்ஷிதோ நரபதி: பத்நீ க்ருஹீதவ்ரதா ।
கௌரவ்யா: பஶவ: ப்ரியாபரிபவக்லேஶோபஶாந்தி: பலம்
ராஜந்யோபநிமந்த்ரணாய ரஸதி ஸ்பீதம் யஶோதுந்துபி: ॥ "

துந்துபி மேளம் அடிக்கும் சப்தத்தையும் யுத்தாரம்பம் செய்யப்படுவதாக முழங்கிய ச்லோகத்தையும் கேட்டு த்ரௌபதி பீமஸேநனைப் பார்த்து 'ஏன் இந்த மேளம் அடிக்கிறது?' என்று வினவ, பீமஸேநன் 'வேறென்ன? யஜ்ஞமொன்று ஆரம்பிக்கிறது' என்று சொன்னார். 'அதென்ன யஜ்ஞம்?' என்று த்ரௌபதி விஸ்மயத்தோடு கேட்கப், பீமஸேநன் சொல்லுகிறார். "இது ரண யஜ்ஞம். எப்படியென்றால், நாங்கள் நான்கு ஸஹோதரர்களும் ருத்விக்குக்கள். அந்த பகவானான ஹரி, கர்மங்களை யெல்லாம் உபதேசம் செய்யும் புரோஹிதர். ராஜாவான யுதிஷ்டிரர் யுத்த மென்கிற யாகத்தில் தீக்ஷிதரான யஜமானர். அவருடைய பத்நியாகிய த்ரௌபதி யாக நியமத்துடன் வ்ரதத்தை க்ரஹித்தவள். கௌரவர்களான சத்ருக்கள் இந்த யாகத்தில் பசுக்கள். இந்த யாகத்திற்கு உத்தேச்யமான பலம், ப்ரியையான உன்னுடைய பரிபவத்தால் உண்டான உன் க்லேசத்தை உபசாந்தி செய்வது தான்." இப்படி வர்ணிப்பது அழகுபோல் இருந்தாலும், பஹுதோஷங்கள் இதில் ஏற்படுகின்றனவென்று வேடிக்கையாகக் காட்டி, அந்தத் தோஷங்களை நீக்கி நிர்த்தோஷமாயும் பஹுகுணத்துடனும் இந்த ச்லோகம் ஸ்வாமியால் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த யுத்த மென்கிற யாக கர்மத்திற்கு ஆராத்யனாக உத்தேச்யன் பகவானென்று சொல்லவேண்டியிருக்க, அவனை அப்படிச் சொல்லாததுமன்றி, அவனைக் கேவலம் புரோஹிதனென்று சொன்னது அநுசிதம். பீமார்ஜுநாதிகள் நிமித்த மாத்ரமென்றும், தானே நிர்வாஹக னென்றும், இந்த யுத்த விஷயத்தில் பகவானுடைய ஸாக்ஷாத் உபதேசம். அவனை நிமித்த மாத்ரமாகக் காட்டுகிறது இந்த ச்லோகம். இந்த யுத்த மென்னும் தர்மத்துக்கு ப்ரயோஜந மென்னவென்றால், த்ரௌ

பதியின் துயர் அறுவது என்று சொல்லப்பட்டதும் அநுசிதம். கண்ணனு டைய ப்ரீதி உத்தேச்யமென்றுவது சொல்லலாம். அவனல்லவோ ஸர்வ கர்ம ஸமாராத்பன். சத்ருக்களாகிய துர்யோதநாதிகளை யாகத்தில் ஸம்ஜ்ஞபநம் செய்யப்படும் பசுக்களுக்கு உவமையிட்டது மிகவும் அநுசிதம். யாக பசுக்களிடத்தில் கோபத்தால் அவற்றைக் கொல்லுவதில்லை. அந்தப் பசுக் களுக்குத் தேஹ வியோஜநத்தால் ஹிம்ஸையென்கிற கெடுதி ஏற்படுவதே யில்லை; பசுக்களின் ஆத்மாவுக்கு மரணமாவது தீங்காவது வருகிறதில்லை; சோபநமான மார்க்கத்தால் அவை தேவலோகத்திற்குப் போகின்றன என் றும், உயர்ந்த க்ஷேமத்தை அவை யடைகின்றன வென்றும், அவற்றை விசஸநம் செய்யுங் காலத்தில் சொல்லும் மந்த்ரம் ஸ்பஷ்டமாய்க் காட்டுகிறது. இங்கே கொடிய விரோதத்தினால் சத்ருக்களுக்கு ஆத்யந்திகமான தீங்கையே செய்யவேண்டு மென்கிற எண்ணத்தினால் கோரமாக அவர்களை வதம் செய்யவேண்டு மென்பது உத்தேசம். இந்தத் தோஷாம்சங்களை நிவர்த்தி செய்து, குணமான பாகத்தை மட்டும் வைத்துக்கொண்டு, மாற்றவேண்டி யதை மாற்றி, ஸ்வாமி யஜ்ஞ ரூபணம் செய்கிறார். 'வதூ' சப்தத்தைக் கவி ப்ரயோகித்தது அழகு. கணவனுடன் சேர்ந்து செய்யும் யஜ்ஞ ஸம்யோகத்தை முன்னிட்டுப் பத்நி என்கிற சப்தரூபம் அநுசாஸநம் செய்யப்பட்டது. 'பத்நியாகிய உன்னுடன்கூட நான் ஸ்வயமாக இந்த யாகத்தை யஜமாநனாக இருந்து தீக்ஷிதனாகச் செய்கிறேன்.' வேணீஸம்ஹார ச்லோகத்தில் யுதிஷ்டிரர் மட்டும் யஜமாந னென்றும், மற்ற நால்வரும் ருத்விக்குக்க ளென்றும் சொன்னதை மாற்றி, இங்கே ஸ்வயம் தானே யஷ்டா என்று விவேகன் சொல்லுகிறார். பஞ்ச பாண்டவர்களும் யுத்தத்தின் பலத்தில் அந்வய முடையவர்கள். அவர்க ளெல்லோரையும் ஸத்ர யாகத்தில்போல யஜமாந கோடியில் சேர்த்துச் சொல்லுவது அழகாயிருக்கும். ஆத்மா என்னும் சேதநனை ப்ரஹ்ம மென்னும் அக் நியில் ஆத்ம ஸமர்ப்பண மந்த்ரோச்சாரண பூர்வகமாக ஹவிஸ்ஸாக 'ப்ரஹ் மத்துக்கே இது சொத்தக்கது' என்று உத்தேசித்து ஸமர்ப்பிக்கிற ஹவிః ப்ரக்ஷேப மாகிய இந்த யாகத்தில் ஆர்த்விஜ்யம் செய்பவர்கள் சமம் தமம் முதலிய குண கணங்கள். இந்த யாகம் பாஹ்ய வ்யாபார மன்றியில் கேவலம் ஆந்தரமான வ்யாபாரம். "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑌵𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌹𑍁𑌤𑌮𑍍। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌤𑍇𑌨 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾॥" என் கிற கீதா ச்லோகத்தில் ப்ரதர்சிதயான ந்யாயம் இங்கே நினைக்கத்தக்கது. ஆந்தரமான இந்த யாகத்தில் யஜமாநன் ஆந்தரமான விவேகன். யஜமானி யாகிய பத்நி ஆந்தரமான ஸுமதி. இதில் ஸமர்ப்பிக்கப்படும் பசுவாகிய ஹவிஸ்ஸு அப்ராக்ருதமான ஆத்ம பசு. இதில் ஆந்தரமான எப்பொழு

தும் அநுவர்த்திக்க வேண்டிய குணங்களான சமதமாதிகள் ஸகல கர்மாக் களையும் நிர்வஹிக்கும் ருத்விக்குகள். யஜமாநனை உத்தேசித்து ருத்விக்குகள் குணபூதர்கள் ஆனபடியால், குணங்களை ருத்விக்குக ளென்று சொல்லியது அழகு. ருத்விக்கணம் என்று சொல்லுவதற்குப் பொருந்த குணகணமென்று உரைத்தது அழகு. இந்த ஆந்தர ருத்விக்குகளுக்கு முகம் இல்லையே என்று ஆக்ஷேபம் வந்தால், சாப்தமாக முகமுளது என்று வேடிக்கையாய்க் காட்ட, 'சம தம முகமான குணகணம் ருத்விக்கு' என்று அழகாய் ப்ரயோகம். ருத்விக்குகள் யஜமாநனால் தக்ஷிணையால் பரிக்ரீதர்களாக (அதாவது விலைக்கு வாங்கப்பட்டவர்போல்) யாக காலத்தில் அடிமைபோல் இருக்கவேண்டுமே யென்றால், இந்தக் குணகணம் தங்கள் ஸ்வபாவமான தாக்ஷிண்யத்தாலும் சேஷத்வ காஷ்டையாலும் க்ரய விக்ரயார்ஹமான தசையை யடைந்து, யஜமாநனாகிய விவேகனுக்கு அத்யந்த பாரதந்த்ரிய ரூபமான சேஷத்வத்தை வஹிக்கிறதென்று, சேஷத்வ வாசியான குண சப்தத்தால் வ்யஞ்ஜிதம். இந்த யாகத்தில் உத்தேச்யமான தேவதை யாரென்றால், வேணீ ச்லோகத்தில் சொன்ன பகவானென்கிற சப்தத்தையே ப்ரயோகித்து, பகவான் உத்தேச்ய னாகிறானென்று கூறப்பட்டது. 'என்ன ப்ரயோஜநத்தையிட்டுப் பகவானை உத்தேச்ய தேவதையாக வைத்து இந்த யாகம் செய்யப்படுகிறது'? என்கிற கேள்வி, 'ஸ கஸ்மாத் உத்தேஶ்ய:' என்பதால் த்வநிக்கிறது. 'கஸ்மாத்' என்றால் 'என்ன ப்ரயோஜநத்திற்காக?' என்று கேள்வி. அதற்குப் பதில் 'ந கஸ்மாத்' என்கிற அர்த்தத்தையுடைய 'ஸ கஸ்மாத்' என்கிற பதில் சப்தம் ப்ரயோகித்தது மிகவும் அழகு. இந்த யாகம் யாதொரு ஸ்வப்ரயோஜநத்தையும் உத்தேசித்ததல்ல; இது ஸ்வயம் ப்ர யோஜநம். நமஸ்காராத்மகமான இந்த யாகத்திற்கு நிரந்தரம் அநுவர்த் தித்து வரும் மேன்மேலும் ஸ்வயம் ப்ரயோஜநமும் ரஸாதிசயமுமான 'வ்ருத்த: வ்ருத்த நமஸ்க்ரியா:' நமஸ்காரத்திற்கு மேல் நமஸ்காரமே ப்ர யோஜநமானதால், தனக்குத் தானே ப்ரயோஜநமென்று சொல்லத் தட்டில்லை. 'தொழுது தொழுது' என்று அநுபவத்தில் ஆழ்வார்கள் பாசுரம், 'ஸேவ்யஸ்வாத்' என்று முதல் சதகத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹித்து ஸேவையே பரம போக்யமென்று காட்ட இரண்டாவது சதகத்தின் அர்த்தம் 'ஹோமஶ்ரீஸ்வாத்' என்று ஸ்வாமியால் ஸங்க்ரஹிக்கப்பட்டது. பகவான் அநந்யாதீநமாயும் ஸ்வதந்த்ரமாயும் ஸர்வதா பவநமுடைய ஸத்தாக இருந்தாலும், ஒரு சேதநனுடைய விவேக புத்திக்கு ஸமர்ப்பண புத்தியோடு உத்தேச்யமானபொழுதுதான் பகவானாகிய தனக்கும் பவந மென்கிற ஸத் தை உண்டாகிறது என்று அவனுடைய நினைப்பு என்று 'உத்தேஶ்யோ பவதி பகவாந்' என்கிற சப்தங்களின் ஸஹபடநத்தால் வ்யஞ்ஜிதமாகிறது.

'ஆத்மா ஹவிஸ்ஸானல், அதுதானே யூபத்தில் கட்டி விசஸநம் செய்கிற பசுவாகவேண்டும். விசஸநத்துக்கு ஈச்வரனாலேயும் ஸாத்ய மில்லாத பசுவல்லவா இங்கே பசுவென்று சொல்ல நேர்ந்தது? வேணீ ச்லோகத்திற்கு மேல் அநுபபத்தி பலமாய் வந்துவிட்டதே' என்று சங்கை வர, அது மிகவும் அழகாகப் பரிஹரிக்கப்படுகிறது. இந்தப் பசு உபநிஷதாரண்யகங்களில் பிறந்து, அந்த ஆரண்யகங்களில் மேய்ந்து வளர்ந்தது. ஆரண்யக பசுக்களை யூபத்தில் கட்டி அவிழ்த்து விடுகிறதே யொழிய அவற்றுக்கு விசஸநம் கிடையாது. கட்டை அவிழ்த்து விடுகிற தென்கிற மோக்ஷத்திற்காகவே ஆரண்யக பசுவைப் பந்தநம் செய்வார்கள். இந்த ஸ்வாரஸ்யத்தைக் காட்ட இந்தப் பசு கட்டப்பட்டு அவிழ்த்தலை அடைகிற தென்று கூறுகிறார். கட்டுண்ட இந்தப் பசு முக்தியை அடைகிறதென்று காட்ட 'ஹஜதி' என்கிற சப்தம் ப்ரயோகித்ததும் அழகு. முக்தியை அடைவதற்கு வேண்டிய யாவதாயுஷம் நிரந்தரம் பஜநம் செய்கிற ப்ரயாஸ மன்றியில், இந்த யாகத்தில் ஹவிஸ்ஸாக ஸமர்ப்பிப்பதற்குப் பசுவாகக் கட்டப்பட்டு உடனே மோக்ஷத்தை அடைகிறான். இவன் பலத்தைப் பஜநம் செய்கிறானே ஒழிய பலத்துக்கு ஸாதநமான பஜநத்தைச் செய்யவில்லை என்று ஸூசநம். பசுவென்கிற சப்தம் ஜீவாத்மாவைச் சொல்லு மென்கிற ஸ்வாரஸ்யமு மிங்கே யுளது. 'விமலகேளநிமல:' என்கிற ப்ரயோகம் அழகு. இதில் ஸ்வாமிக்கு அதிக ப்ரீதி. 'விமலநம் நிமலஸ்ய கிஹூதம்' என்று யாதவாப்யுதயத்தில், வஸுதேவருடைய விலங்குகள் தெறித்து விழும்படி செய்த குழந்தை கண்ணனுடைய ஸந்நிதியின் மஹிமையைக் கூறினார். அங்கேயும் இந்த இரண்டு சப்தங்களின் ஸஹபடநம். 'நிமலம்' என்கிற விலங்கு 'விமலநம்' ஆவது ந்யாயந்தானே என்கிற சப்த சாடு. 'ஜநஸ்ய ஹ்ருதகேளகொடிநிமலைவி:' என்கிற பாடம் ஸ்வாமிக்கு ஸம்மதமா யிருக்கலா மென்று நினைக்க இடமுண்டு. 'நிஸிஉ:' என்று அங்கே பாடம் சொல்லுவதை விட 'நிமல:' என்று சொல்லுவது ஸ்வாமியினுடைய ரீதிக்கு ஒத்திருக்கும். இப்பொழுது கர்ம விஷயத்தில் சேர்த்து 'நிமல' சப்தத்தை ப்ரயோகிக்கும் இரண்டு இடங்களைத் தவிர, கர்மபந்தம் என்கிற வ்யவஹாரத்திற்கு அநுகுணமாக 'கேளநிமலம்' என்று ப்ரயோகிப்பது அழகாகும். இப்படி ரஸஸாகரத்தில் நம்மை முழுகச்செய்கின்றன உத்தம காவ்யமான ஸ்வாமி ச்லோகங்கள். மஹா கவிகளின் ஸ்ரீஸூக்திகளில் உள்ள தோஷங்களை நிவ்ருத்தி செய்து, அந்த ஸ்தாநத்தில் வேறு ச்லோகம் செய்து காட்டுவதால் அந்தத் தோஷங்களை நேராய்ச் சொல்லாமல், வ்யங்க்ய மர்யாதையாய்க் காட்டுகிறார். தோஷங்களை ஸாக்ஷாத்தாகக் கீர்த்தநம் செய்யாமல் வ்யஞ்ஜநா வ்ருத்தியால் ஸூசநம் செய்வதுதான் ந்யாயம். 'நாத

க்ஷிணம் யா.மஶாஜ.நக்ஷி' என்று பெரியோர்கள் சொல்வார்களே. இந்த யாகத்தில் தக்ஷிணை என்னவென்று கேட்டால், இதில் ஸர்வஸ்வமும் தக்ஷிணையாக த்யாகம் செய்யப்படுகிறது என்று கூறுகிறார். யாகத்திற்கு முக்யமான தக்ஷிணை யென்கிற அம்சத்தை வேணீ ச்லோகம் மறந்துவிட்டது. இங்கே ச்லோகத்திற்கு முன்பே 'ஸவஜஹ்வஜ க்ஷிணோயஜ்ஞ்ஞ: ப்ரவதஜதெ' என்று கூறப்பட்டது. வேணீ ச்லோகத்திற்கு முன்பு 'யஜு:ப்ரவதஜதெ' என்று சொல்லப்பட்டதை அநுஸரித்தே இங்கே 'ஃயஜ்ஞம்' [ப்ரவர்த்திக்கிறது] என்று கூறியது. தம்முடையதாக யாதொரு தநமும் இல்லாமையும், தமதென்று உள்ளதை யெல்லாம் தக்ஷிணையாக ஸத்துக்கள் விஷயத்தில் த்யாகம் செய்து விடுவதும், ஆத்ம யாகம் செய்யும் ப்ரபந்நர்களுடைய ஸ்வரூப மென்றும், அவர்களுக்குள்ள ஸர்வ ஸொத்தையும் தக்ஷிணையாக யோக்யர்களான பாத்ரங்களுக்கு த்யாகம் செய்யவேண்டியது அவச்யமென்றும் ஸ்வாமி இங்கே ஸூசிக்கிறார்போலும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

# வேதாந்த பாரிஜாத ஸௌரபமும் ஸ்ரீ நிம்பார்க்காசார்யரும்.

(ஸ்ரீ. உப. வித்வாந் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி).

(ஸஞ்சிகை 10, பக்கம் 282.)

இனி, இவருடைய பாஷ்ய சைலியை விசாரிப்போம். 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற முதல் ஸூத்ரத்திலுள்ள 'அத' சப்தத்திற்கு 'வேதாத்யயநம் செய்த பிறகு' என்பது அர்த்தம். "அத:"—வேதத்தினால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற கர்மாக்கள் அநந்தமாயும் அக்ஷயமாயுமுள்ள பலன்களுள்ளவைகளென்கிற ஆபாதப்ரதீதியினால், கர்ம விசாரத்தில் ப்ரவ்ருத்தித்து விசாரம் செய்து, கடைசியாக அக்க கர்மாக்கள் அல்பமாயும் நச்வரமாயுமிருக்கிற பலனுள்ளவைகளென்று நன்கு அறிந்து நிர்வேதமடைந்தவனாக இருப்பதால், அநந்தமாயும் நிரதிசயமாயுமுள்ள ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை அடைய விருப்பமுள்ளவனும் பகவத் ப்ரஸாதத்தை அபேக்ஷிக்கிறவனும் பகவத்

தர்சநேச்சையில் லம்படனும் ஆசார்யனையே தேவதையாகப் பாவிக்கிறவனும் ஸ்ரீ குரு பக்தியிலேயே ப்ரேமை உள்ளவனும் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவனுமான ஆஸ்திகனால் அநந்தங்களாயும் அசிந்த்யங்களாயும் ஸ்வபாவஸித்தங்களாயுமிருக்கிற ஸ்வரூபம் குணம் சக்தி முதலியவைகளால் மிக்க ப்ருஹத்வ குணமுள்ளவனும் புருஷோத்தமனும் ப்ரஹ்ம சப்தத்தால் சொல்லத்தக்கவனுமான யாதொரு ரமாகாந்தனுண்டோ, அந்த ரமாகாந்த விஷயமான ஜிஜ்ஞாஸையானது எப்பொழுதும் ஸம்பாதிக்கத்தக்கது.' இது நிம்பார்க்க பாஷ்யம். இதற்கும் ஸ்ரீ பகவத்ராமாநுஜ பாஷ்யத்துக்கும் அர்த்தத்தில் வேறுபாடுண்டு. ஸ்ரீபாஷ்யத்தில், 'அத' சப்தத்திற்குக் 'கர்ம விசாரத்திற்குப் பிறகு' என்று அர்த்தம். 'அத:' என்கிற சப்தத்திற்கு, 'கர்மாக்கள் அல்பாஸ்திர பலன்களுடன் கூடியவைகளென்கிற நிச்சயத்தை முன்னிட்டு ப்ரஹ்ம ஜ்ஞாநத்தில் அநந்தஸ்திர பலத்வாபூாத ப்ரதீதியினால்' என்று அர்த்தம். 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' பதத்திற்கு 'விசாராத்மகமான ப்ரஹ்ம ஜ்ஞானம்' என்பது அர்த்தம்.

தத்து ஸமந்வயாத்—[நி-பா] தத்—அறியவேண்டுமென்று விரும்பத்தக்கதும், விச்வத்துக்கும் காரணமாக இருப்பதும், சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டிருப்பதுமான வஸ்து ப்ரஹ்மமே; கர்மா முதலானவைகளல்ல. ஸமந்வயாத்—அந்த ப்ரஹ்மத்தினிடத்திலேயே முக்ய வ்ருத்தியினால் வேதம் முழுவதும் நன்கு அந்வயிப்பதால். [ரா-பா] தத்—சாஸ்த்ர ப்ரமாணகத்வமானது ப்ரஹ்மத்துக்கு ஸம்பவிக்கவே ஸம்பவிக்கிறது; ஏனெனில், ஸமந்வயாத்—பரம புருஷார்த்த பூதமான ப்ரஹ்மமே அபிதேயமாக நன்கு அந்வயிப்பதால்.

'ஈக்ஷதேர் நாசப்தம்'—[நி-பா] ஸாங்க்யர்களுக்கு அபிமதமான அசேதநமான ப்ரதாநமோவென்றால், அசப்தம்—ச்ருதி ப்ரமாணமில்லாதது; (ஆதலால்) ந—ஜகத்காரணமாகாது; ஏனெனில் ஜகத் கர்த்தாவுக்குச் சேதந தர்மமான ஈக்ஷணமானது ச்ருதியில் கேட்கப்படுவதால். [ரா-பா] அசப்தம்—எதில் சப்தமொன்றே தனித்து ப்ரமாணமன்றோ, அதாவது அநுமாநமும் ப்ரமாணமோ அப்படிப்பட்ட ப்ரதாநமானது. ந—ஜகத்காரணத்வாதி வாக்யத்தால் ப்ரதிபாத்ய மல்ல; (ஏனெனில்), ஈக்ஷதே:—ஸத் என்கிற சப்தத்தால் சொல்லத்தக்க ப்ரஹ்மத்தைச் சார்ந்த வ்யாபார விசேஷத்தைச் சொல்லுகிற (ஸங்கல்பவாசியான) ஈக்ஷணமானது ச்ருதியில் கூறப்பட்டிருப்பதால்.

ஹூமாஸம்ப்ரஸாதாதத்யுபதேசாத் ।—[நி—பா] ஹூமா—பரமாசார்யரான ஸ்ரீ குமாரர்களால் நமக்குக் குருவான நாரதருக்கு உபதேசிக்கப் பட்ட பூமா என்கிற வஸ்துவானது, ந—ப்ராணனல்ல; புருஷோத்தமனே. (ஏனென்றால்), ஸம்ப்ரஸாதாத்—ப்ராணனைவிட, அதி—மேலே, உபதேசாத்—பூமசப்த வாச்யமான ஜகத்காரண வஸ்துவை உபதேசித்திருப்பதால். [ரா-பா] ஹூமா—பூமகுணமுள்ளவன் ப்ரத்யகாத்மா வல்ல; பரமாத்மா. (ஏனெனில்) ஸம்ப்ரஸாதாத்—ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும், அதி—அதிகனாக, உபதேசாத்—பூமகுணமுள்ளவனும் ஸத்ய சப்தத்தால் சொல்லத்தக்கவனுமான பரமாத்மா உபதேசிக்கப்பட்டிருப்பதால்.

நிம்பார்க்கர் இரண்டாகக் கருதும் 'தர்மோபபத்தேச்ச ।  ப்ரஸித்தேச்ச ।' என்கிற ஸூத்ரங்கள், ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தில் ஒரே ஸூத்ரமாகப் பாவிக்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாஷ்யத்தில் 'அவிஸம்வாதாத்' என்கிற ஸூத்ரத்தோடு தஹராதிகரணம் முடிவுபெற்றிருக்கிறது.

சங்கர பாஷ்யத்திலும் பாமதியிலும் 'அவிஸம்வாதாச்ச' என்று 'ச' காரத்தை அதிகமாகச் சேர்த்து ஸூத்ராநுபூர்வியை மாற்றியிருப்பதுடன், 'அநுக்ருதேஸ்தஸ்ய ச, அபி ச ஸ்மர்யதே' என்கிற இந்த இரண்டு ஸூத்ரங்களும் 'தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி' என்கிற ச்ருதியானது பரப்ரஹ்மபரமென்பதை நிர்ணயிப்பதற்காக ப்ரவ்ருத்தித்திருக்கிற வேறு அதிகரண ப்ரவிஷ்டங்களென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. நிம்பார்க்காசார்யரோ நமது ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளத்தை அநுஸரித்தே 'ச'காரத்தைச் சேர்க்காமலே 'அவிஸம்வாதாத்' என்கிற பாடத்தையே ஏற்றுக்கொண்டு அதிகரண பேத கல்பநம் ஸாஹஸமென்று எண்ணி, கீழ் வரையப்பட்டுள்ள இரண்டு ஸூத்ரங்களையும் தஹராதிகரணத்திலேயே சேர்த்துப் பொருள் கூறியிருக்கிறார். மூன்றாவது அத்யாயம் இரண்டாவது பாதம் உபயலிங்க பாதத்தில், 'மாயாமாத்ரந்து கார்த்ஸ்ந்யேநாநபிவ்யக்தஸ்வரூபத்வாத்' என்கிற ஸூத்ரத்தில் ஸ்ரீபாஷ்யகாரரைப் போலவே நிம்பார்க்காசார்யரும் மாயா சப்தம் ஆச்சர்ய பரமென்றே

அர்த்தம் செய்திருக்கிறார். இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில் பசுபத்யதிகரணத்தில், 'பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்' என்கிற ஸூத்ரத்தில் நிம்பார்க்காசார்யர், 'பசுபதி ப்ரதிபாதகசாஸ்த்ரம் உபேக்ஷிக்கத்தக்கது; ஏனெனில் 'அஸாமஞ்ஜஸ்யாத்'—ஜகத்பிந்ந நிமித்தோபாதாந காரண ப்ரதிபாதக ச்ருதி விரோதத்தாலும் ச்ருதி விருத்தங்களான தர்மங்களை ப்ரதிபாதிப்பதாலும், என்று ஸ்ரீ பாஷ்யத்திலும் நிமித்தோபாதாந காரணங்களுக்குப் பேதத்தைச் சொல்வதாலும், பசுபதியை நிமித்த காரணமாகச் சொல்வதாலும் பசுபதி மதம் ஆதரிக்கத்தக்கதல்லவென்று சொல்லியிருக்கிறார். இரண்டு பாஷ்யகாரர்களுக்கும் இந்த ஸூத்ரத்தில் அபிப்ராயம் ஒன்றுபட்டிருக்கிறது.

இவ்வாறாக, அநேக பாகங்களில் ப்ரதாநார்த்தங்களிலும் விஷய வாக்யங்களை எடுப்பதிலும் அதிகரண விபாகங்களிலும் ஸூத்ரார்த்த வர்ணநத்திலும் அநேகமாக இந்த நிம்பார்க்காசார்யர் ஸ்ரீபாஷ்யகாரரை அநுஸரித்தே இருக்கிறார். தத்வ ப்ரக்ரியையை நிரூபிக்கும் விஷயத்திலும் பெரும் பான்மையாக இவர் ஸ்ரீபாஷ்யகாரரையே ஒத்தவர். அவாந்தர விஷய விசார பரிபாடியில் வேறுபாடு இருந்தபோதிலும், உள்ளபடி ப்ரஹ்ம ஸ்வரூப ஸ்வபாவரான விபூதிகளை வர்ணிப்பதனாலும், சிதசித் தத்வஸ்வரூப நிரூபணத்தாலும், முக்தி தசையில் ஜீவனுக்கு ப்ரஹ்மத்தோடு போகத்தில் பரமஸாம்யத்தை ஒப்புக்கொண்டிருப்பதாலும், சிதசிதீச்வர தத்வங்களுக்கு நன்கு பேதத்தைக் கூறியிருப்பதாலும், விஷ்ணு பக்தியினால் அலங்கரிக்கப்பட்ட உள்ளத்துடன் கூடியவராக இருப்பதால் தேவதாந்தரத்தைக் கனவிலும் காணாதவராக இருப்பதாலும், ஸ்ரீ பகவத் ராமாநுஜ யதீந்த்ர மதஸ்தர்களான அகில ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் இவர் ஆசார்ய புத்தியுடன் பஹுமாநிக்கத் தக்கவரென்றே ஆஸ்திகர்கள் பகர்கின்றனர்.

இவ்வண்ணம் ஸ்தாலீபுலாக ந்யாயத்தால் இந்த நிம்பார்க்க பாஷ்யத்தின் அர்த்த நிரூபண சைலியை என்னுடைய சிற்றறிவுக்குத் தக்கபடி எடுத்து எழுதலானேன். அபிஜ்ஞர்கள் இந்த ஸாஹஸத்தை க்ஷமித்தருள ப்ரார்த்திக்கிறேன்

ஸ்ரீ:

# * கந்யகைகளின் விவாஹ வயது மசோதா.

---

ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸம் முதலான நமது சாஸ்த்ரங்கள், இவ்வுலகத்தில் ஸம்ஸார தாபத்ரயங்களின் நடுவிலிருந்து வருந்துகிற ஜீவாத்மாக்கள் ஸ்வர்க்காதி பரலோகங்களில் அநுபவிக்கக்கூடிய இன்பங்களே சிறந்த புருஷார்த்தங்களென்றும், அவைகளுக்கு ஸாதநங்களான கார்யங்களே தர்மங்களென்றும், அத்தர்மங்களை ஆராய்ந்தெடுத்து அநுஷ்டிப்பதே மானிடப் பிறவியின் கடமையென்றும், அவற்றை அநுஷ்டிக்கும் காலத்தில் ஸம்பாவிதங்களான பசி தாஹம் மழை வெயில் காற்று முதலிய கஷ்டங்களை ப்ராணாந்திகமாகப் பொறுத்து, ‘கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலு மைங்கருவி’ கண்ட இன்பங்களை வேறுத்து ஆத்ம ஸுகத்தை அபேக்ஷிக்குமவனே அறிவுடையவனென்றும், அவ்வறிவின்றி ஆஹார நித்ராதிகளோடு காலத்தைக் கழிக்குமவனே விலங்குகளோடு வாசியில்லாதவனென்றும், பலபடி விஸ்தாரமாக நிரூபித்திருக்கின்றனவென்று கற்றுணர்ந்த வித்வாங்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

இவ்வாறு சாஸ்த்ரங்களின் ஆழ்ந்த அபிப்ராயங்களை ஆராய்ந்து பார்க்கச் சற்றேனும் சக்தியில்லாத சிலர், ம்ருக ஸ்வபாவமான மிதுந கார்யங்களையே மஹாநந்தமாக நினைத்திருக்கும் மாந்தருடைய ஸஹவாஸத்தினால் மதிமயங்கி, ‘இவ்வுலகில் சிற்றின்பப் பெருமையையே சாஸ்த்ரங்களும் ச்லாகித்துச் சொல்லுகின்றன’ என்று ப்ரமித்து, இதனை அந்யர்கட்கும் உபதேசித்துக் கெடுப்பதோடு அரசர்கள் மூலமாக நிர்ப்பந்திக்கவும் ஆரம்பித்து விட்டார்களே!

முற்காலத்தில் மஹர்ஷிகள் மொழிந்திட்ட புராணங்களில் ‘ஹவிஷ்யதி யனொத்ரும்’ [ஸநாதந தர்மங்கள் இக்கலியுகத்தில் தலைகீழாக நடக்கப் போகின்றன] என்று தெரிவித்த விஷயத்தைக் குறைவின்றிக் காப்பாற்று

---

* இது, வேலூரில், ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

கிற புத்திமான்களிடம் நாம் க்ருதஜ்ஞதையைக் கொண்டாட வேண்டியது அவச்யமானாலும், இவர்களுடைய விபரீத ப்ரவ்ருத்தியினால் அளவில்லாத ஆத்மாக்கள் அருநரகத்தழுந்தி வருந்தும்படி நேரிடுவதைக் குறித்து வருந்துகின்றோம். இப்படி, நரகத்துக்கு நாற்றங்காலாகும்படி நாகரிகர்கள் நமக்குக் காட்டியிருக்கும் நல்வழிகளில், நமது கந்யகைகளுக்கு வயது வந்த பிறகே விவாஹம் செய்யவேண்டியது என்கிற நிர்ப்பந்தம் தத்காலம் விவேகிகளுடைய வருத்தத்துக்கு விளை நிலமாக இருப்பதால், அதை நினைத்து நெஞ்சம் புண்ணாகும் நல்லோர்கள் நியமநத்தினால் மேற்கூறிய விஷயத்தில் நமது சாஸ்த்ரங்களின் வாஸ்தவமான அர்த்தத்தை நாம் வெளியிட வேண்டியது அவச்யமாகிறது.

இவ்விஷயத்தில் நமது நாகரிகர்களுடைய ப்ரதாநமான அபிப்ராயங்களாவன:—

1. ஸ்த்ரீகளும் புருஷர்களும் சேர்ந்து செய்யும் விவாஹத்தில், புருஷனுக்கு இஷ்டமிருந்தால் விவாஹமில்லாமல் இருப்பது போல ஸ்த்ரீகளும் விவாஹமின்றி இருக்கலாம்.

2. விவாஹம்செய்து கொள்வதற்கு இஷ்டமுள்ள ஸ்த்ரீகளும் இஷ்டமுள்ள பொழுது விவாஹம் செய்துகொள்ளலா மென்பதோடு, அவர்கள் பால்யத்தில் செய்துகொள்வதும் பிசகு.

3. நிஷேகம் என்கிற ஸம்ஸ்காரம் ரஜஸ்வலையாகி 16-தினங்களுக்குள் செய்யவேண்டியதென்கிற நிர்ப்பந்தமில்லை; இஷ்டமிருக்கும்பொழுது செய்துகொள்ளலாம்.

4. சாஸ்த்ரங்களில், தவறி நடந்ததற்கு ப்ராயச்சித்தங்களை விதித்திருப்பதால், விருத்தங்களைச் செய்துகொண்டு ப்ராயச்சித்தங்களைச் செய்துவிட்டால் பாதகமில்லை.

5. புருஷனுக்குப் போல ஸ்த்ரீகளுக்கும் குருகுல வாஸம் முதலான வ்ரதங்கள் இருக்கவேண்டியது உசிதம்.

6. இவைகளெல்லாம் நமது சாஸ்த்ர ஸம்மதமான விஷயங்கள்; அப்படி இல்லாத விஷயங்களைக் கூட தத்கால ஸ்திதியை அநுஸரித்து நாம் சாஸ்த்ர ஸம்மதமாக்கிக் கொள்ள வேணும்.

இவை போல்வன இன்னும் பல உள. இவற்றிற்குச் சாஸ்த்ர ஸம்மதமான ஸமர்தாநங்களை அடியிற் கூறுவோம்:—

ஸ்த்ரீகளுக்கு விவாஹம் என்கிற ஸம்ஸ்காரம் அவச்யம் செய்யவேண்டியதான கடமையாகும். இவ்விஷயத்தில், 'அமந்த்ரிகா து கார்யேயம் ஸ்த்ரீணாமாவ்ருதசேஷத:' என்று மநு ஸ்ம்ருதியில் ஸ்த்ரீகளுக்கு எல்லா ஸம்ஸ்காரங்களையும் அவச்யம் செய்தே தீரவேண்டியதென்று விதித்திருப்பதாலும், 'தூஷ்ணீமேதா: க்ரியா: ஸ்த்ரீணாம் விவாஹஸ்து ஸமந்த்ரக:' [யாஜ்ஞவல்க்யர்] என்று ஸ்த்ரீகளுக்கு மற்ற எல்லா ஸம்ஸ்காரங்களையும் மந்த்ர மில்லாமல் செய்யவேண்டிய தென்றும், விவாஹத்தை மட்டும் மந்த்ரங்களோடு செய்யவேண்டிய கடமையாக விதித்திருப்பதாலும், 'ஜாதே ஸம்ஸ்காரா: [மந்த்ரதோஷாவஹாஸ்த்ரியை । ஸ்த்ரீணாம் தூஷ்ணீம் கார்யா:। விவாஹஸ்து ஸமந்த்ரக:' [ஸம்ருத்யர்த்தஸாரம்] என்று மந்த்ரங்களோடு கூடின விவாஹத்தை ஸ்த்ரீகளுக்கு அவச்யம் செய்ய வேண்டியதென்று விதித்திருப்பதாலும், 'ஸ்த்ரீணாமுபநயநஸ்தாநே விவாஹம் மநுரப்ரவீத்' என்று வ்யாக்ரபாதாதிகள் ஸ்த்ரீகளுக்கு உபநயந ஸ்தாநத்தில் விவாஹத்தை மநு விதித்திருப்பதாகச் சொல்லுவதாலும், ஸத்ரீகளுக்கு விவாஹ ஸம்ஸ்காரம் அவச்யம் செய்ய வேண்டிய தென்று வ்யக்தமாக நிச்சயிக்கப்படுகிறது.

மநு ஸ்மருதியில், யதா காலத்தில் உபநயநம் செய்து கொள்ளாத த்விஜனைக் குறித்து 'அத ஊர்த்வம் த்ரயோப்யேதே யதாகாலமஸம்ஸ்க்ருதா: । ஸாவித்ரீபதிதா வ்ராத்யா பவந்த்யார்யவிகர்ஹிதா: ॥ நைதைரபூதைர்விதிவதாபத்யபி ஹி கர்ஹிசித் । ப்ராஹ்மாந்யௌநாம்ஶ்ச ஸம்பந்தாநாசரேத்ப்ராஹ்மண: ஸஹ ॥' என்று வேதாத்பநம் செய்துகொள்வது பெண்களைக் கொடுத்து வாங்குவது முதலான ஸம்பந்தங்களை ப்ராஹ்மணன் செய்துகொள்ளக்கூடாதென்றும், மேல்படி உபநயநம் செய்துகொள்ளாத த்விஜர்கள் வ்ராத்யர்களென்றும் சொல்லி யிருப்பதாலும், மேல்படி வ்ராத்யதயை யாஜ்ஞவல்க்யர் உபபாதகமென்று சொல்லி, அதற்கு ப்ராயச்சித்தத்தை 'உபபாதகஶுத்தி: ஸ்யாதேவம் சாந்த்ராயணேந வா । பயஸா வாபி மாஸேந பராகேணாதவா புந: ॥' என்கிற வசநங்களினால் சாந்த்ராயண வ்ரதம் அநுஷ்டிப்பது, ஒரு மாதம் பயோவ்ரதமாக இருப்பது, பராகம் யென்கிறக்ருச்ரத்தை அநுஷ்டிப்பது முதலியனசெய்யவேண்டுமென்றுசொல்லியிருக்கிறார். மேல்படி ப்ராயச்சித்தங்கள் 'ஸ்த்ரீணாமுபநயநஸ்தாநே விவாஹம் மநுரப்ரவீத்' என்கிற வசநத்தின்படியே ஸ்த்ரீகளுக்கு உபநயந ஸ்தாநத்தில் விஹிதமான விவாஹத்தை உசித காலத்தில் செய்யாதபொழுது அதிதேசத்தினால் வருகிறபடியால் மேற்படி ஸ்த்ரீகளுக்கு இவ்வுலகத்தில்

பந்து பரிபாலநத்தை இழந்துபோவது முதலிய ப்ரத்யவாயங்களும் பர லோகத்திலும் யதா சாஸ்த்ரம் நரகம் முதலிய ப்ரத்ய வாயங்களும் ஸம்பா விதங்களாகும்.

ப்ரஹ்மசாரியான புருஷ விஷயத்தில், 'மஹஃஷூஷிஹரு ஷூதிகஃ கூயஃரஹூரவரிமூஹம் । ஷுஹஅயெஃணவா காமுஃ நயெகூ ஸஂகஷு வஃமவஃகம் । வெவவாநவெஷா வாவிஹவெகூ வரிஷூஃஜஃவெஷுயா ॥' என்று வ்யாஸாதிகள் புருஷனுக்கு இஷ்டமிருந்தால் அவன் விவாஹத்தைச் செய்து கொள்ளலாம், இல்லாவிட்டால் விட்டுவிடலாமென்று சொல்லியிருப் பதுபோல ஸ்த்ரீகள் விஷயத்திலும் அவர்கள்விவாஹத்தை இஷ்டமிருந்தால் செய்து கொள்ளலாம் இல்லாவிட்டால் விட்டு விடலாமென்று சொல்வதற்கு ப்ரமாணமில்லை.

ஹாரீத ஸ்ம்ருதியில், 'விவிஷாஃஷியஃ ஷுஹவாஷிநூஃ ஸஷெஷூாவயூஷ தகூ ஷுஹவாஷிநீநாம உவநயநம் அமீஂயநஂஷ மூஹெஹிக்ஷாஅ பெஃதி, ஸஷெஷூாவயூநாஂதூ உவஷிதெ விவாஹெ கூஂஷிஃவநயநஃகூ கூஸவா விவாஹஃ காயஃ' 'விதாவிதூ வெஷூா ஷுதாவாதெநாஜஷூா வயெதாஃ । ஷுமூஹெ தெவ கநூாயாஃ ஹெக்ஷஅயஃா வியெதெ ॥ வஜஃயெஹஜிநம் வீரஂ ஜடாயாரணவெவ அ' என்கிற வாக்யங்களினால் ஸ்த்ரீகள் விவாஹமில்லாம லிருக்கலாமென்று சொல்லியிருப்பது யுகாந்தர விஷயம்; இந்தக் கலியுகத்தில் அது கூடாதென்கிற விஷயத்தை 'வூஈா கஷெதூ நாரீணாம் ஸௌஂஜீஂயநவிஷூதெ । கயூூவநம் அ வெஷாநாம ஸாவிதூீ வஅநம் தயா' என்கிற யம ஸ்ம்ருத்யாதி வசநங்களை அநுஸரித்துப் பாராசரமாதவீயம் நிர்ணயஸிந்து வர்ணாச்ரம காண்டம் முதலிய க்ரந்தங் களில் நிச்சயித்திருப்பதால், இக்கலியுகத்தில் ஸ்த்ரீகள் விவாஹம் செய்து கொள்ளாமலிருப்பதற்கு மேற்படி ஹாரீத ஸ்ம்ருதி வாக்யம் ப்ரமாணமாகாது. ஆகையால் ஸ்த்ரீகளுக்குச் சாஸ்த்ர விஹித காலத்தில் விவாஹ ஸம்ஸ் காரம் செய்தே தீரவேண்டுமென்று நிச்சயிக்கப்படுகிறது.

விவாஹம் ஸ்த்ரீகளுக்கு எட்டாவது வயதில் செய்வதுதான் முக்ய மாகும். 'உவாயநொஷிதஃ காமஃஷீணாஃஷாஹ கஃணி । ஷீணாஃஷ வநயஹாதெ விவாஹஜநஷுவீகூ ॥ விவாஹஂதொவநயநம் ஷீணா ஹஹவிதாஜஹஃ । தஹாஷூஹஃாஷஃதெஷஃ ஜாநுதொவாஷவஷூஃ ॥ விவா ஹஷூஷவஷஃாயாஃ கநூாயாஷூ ஷுஸஷூதெ ॥' என்கிற வ்யாக்ரபாத யம ஸம்வர்த்தாதி ருஷிகளுடைய ஸ்ம்ருதிகளில், 'அஷூவஷஃம ஷுாஹண

உபநயீத' என்று வேதத்தில் ப்ராஹ்மணனுடைய உபநயநத்திற்கு முக்ய காலமாகச் சொன்ன எட்டாவது வயதையே ஸ்த்ரீகளுக்கு விவாஹ காலமாகச் சொல்லியிருப்பதோடு, 'அஷ்டம: ஶ்ரேஷ்ட²:' என்றும், 'ப்ரஶஸ்யதே' என்றும் வ்யக்தமாக ஸ்த்ரீகளுக்கு எட்டாவது வயதே விவாஹத்திற்கு முக்ய காலமென்று சொல்லியிருப்பதாலும் நிச்சயிக்கப்படுகிறது. இது எல்லா ஜாதி ஸ்த்ரீகளுக்கும் ஸமாநமென்கிற விஷயமும், 'ஸர்வேஷாம் வர்ணாநாமஷ்டவர்ஷம் விவாஹஸ்தாவதேவ வர்ணித:' என்கிற பாரத வாக்யத்தினல் ஏற்படுகிறது. ஸ்த்ரீகளுடைய விவாஹத்திற்கு முக்ய காலமானது எட்டாவது வயது என்பதும், ஒன்பது பத்தாவது வயது வரையில் ஸ்த்ரீகளுடைய விவாஹத்திற்குக் கௌண காலமென்பதும், 'அஷ்டவர்ஷா ப⁴வேத்³கௌ³ரீ நவவர்ஷா து ரோஹிணீ । த³ஶவர்ஷா ப⁴வேத்கந்யா அத ஊர்த்⁴வம் ரஜஸ்வலா ॥ கௌ³ரீம் த³த³ந்நாகப்ருஷ்ட²ம் வைகுண்ட²ம் ரோஹிணீம் த³த³த் । கந்யாம் த³த³த் ப்³ரஹ்மலோகம் ரௌரவம் து ரஜஸ்வலாம் ॥' என்கிற ப்ருஹஸ்பதி யமாதி ஸ்ம்ருதிகளில் ஒன்பதாவது பத்தாவது வயதுள்ள ஸ்த்ரீகளுக்கு 'ரோஹிணீ' 'கந்யா' என்று பெயரிட்டு, அவர்களைத் தாநம் செய்கிறவனுக்குப் புண்ய லோக ப்ராப்தி ரூப பலங்களைச் சொல்லி யிருப்பதால், ஸ்த்ரீகளுடைய ஒன்பதாவது பத்தாவது வயதில் விவாஹம் செய்வதும் சாஸ்த்ர ஸம்மதமான கௌண காலமென்பது நிச்சயம்.

பதினோராவது வயது முதல் ஸ்த்ரீகளுடைய விவாஹமானது சாஸ்த்ர ஸம்மதமன்று. 'அத ஊர்த்⁴வம் ரஜஸ்வலா' என்று பதினொரு வயது முதல் ஸ்த்ரீகளுக்கு 'ரஜஸ்வலை' என்று பெயர். அவளைத் தாநம் செய்தவனுக்கு 'ரௌரவம் து ரஜஸ்வலாம்' என்று ரௌரவ நாக ப்ராப்தியைச் சொல்லியிருப்பதால் பதினோராவது வயதில் ஸ்த்ரீகளுக்கு விவாஹம் செய்வது சாஸ்த்ர ஸம்மதமல்லவென்று தீர்மானிக்கப்படுகிறது.

இப்படி ப்ருஹஸ்பதி ஸ்ம்ருத்யாதிகளில் 'அஷ்டவர்ஷா' என்கிற முதல் ச்லோகத்தில் 8, 9, 10 ஆவது வயதுள்ள ஸ்த்ரீகளுக்குக் 'கௌரீ' 'ரோஹிணீ' 'கந்யா' என்றும், பதினோராவது வயது முதல் ஸ்த்ரீகளுக்கு 'ரஜஸ்வலை' என்றும் பெயரிட்டு, அந்த ஸ்த்ரீகளைத் தாநம் செய்தவனுக்குப் பலங்களைச் சொல்லுமிடத்தில், 'ரௌரவம் து ரஜஸ்வலாம்' என்று அந்தப் பதினோராவது வயது ஸ்த்ரீகளைத் தாநம் செய்தவனுக்கு நரகம் வருமென்று அடுத்த ச்லோகத்தில் சொல்லியிருப்பதால், இதற்கு விருத்தமாக வயதை அநாதரித்து, ருதுவாகும் வரையில் ஸ்த்ரீகளுக்கு விவாஹம் செய்வது சாஸ்த்ர ஸம்மதமாகுமென்று சிலர் சொல்வது ப்ரமாணமாகாது. இது ப்ரமாண

மானல் பதினெட்டாவது வயது வரையிலும் கூட இக்காலத்திலும் ருது வாகாத பெண்களை நாம் பார்ப்பதால், அந்த விஷயத்தில் பதினெட்டாவது வயது ஸ்த்ரீகளுடைய விவாஹம் கூட சாஸ்த்ர ஸம்மதமாகு மென்று சொல்ல ப்ரஸங்கிக்கும். அது இஷ்ட ப்ரஸங்க மென்றால் 'ஊகாஉயாஷா ஓாஙஷ ஊதஉஉ-நஉாஜாஉபஷாஹவெக' என்றும், 'கநூா ஆஉபஜெ வஷெஉ யா நஉதா மநஹெவஹெக । ஹ-ஹணஹதூா விதஉஷஷூா: ஷாகநூா வஙயெக ஷுயம்' என்றும், 'வூாவெுதஉ ஆஉபெ வஷெஉ ய: கநூா நவுயஹுதி। ஜாஸிஜாஸீ ரஜஷஷூா: விதா விபதி ஸொணிதம்' என்றும், ருதுவைக் குறிப்பிடாமல் வயதை மாத்ரம் குறிப்பிட்டுப் பத்தாவது வயதிற்குள் ஸ்த்ரீ களைத் தாநம் செய்யாதவனுக்கு ப்ரூணஹத்யாதி ப்ரத்யவாயத்தைச் சொல்லு கிற வாக்யங்கள் விரோதிக்கும். இதனால், 'வூாவெுதஉ ஆஉபெ வஷெஉ ய: கநூாம் ந வுயஹுதி। ஜாஸிஜாஸீ ரஜஷஷூா: விதா விபதி ஸொணிதம்॥', 'கநூா ஆஉபஜெ வஷெஉ யா நஉதா மநஹெவஹெக। ஹ-ஹணஹதூாவி தஉஷஷூா: ஷாகநூாவஙயெகஷுயம்॥' என்னும் வசநங்களில் பன்னி ரண்டாவது வயதில் கந்யகையைத் தாநம் செய்யாதவனுக்கு ப்ரத்யவாயத் தைச் சொல்லுவதால், பதினோராவது வயது முடிவு வரையில் ஸ்த்ரீகளுக்கு விவாஹம் செய்வது சாஸ்த்ர ஸம்மதமென்று சிலர் சொல்வதும் அநுசித மென்று நிச்சயிக்கப்படுகிறது. 'ஙஷவஷஉா' என்பது முதலான கீழ்ச் சொல்லப்பட்ட வசநங்களில் பத்தாவது வயதிற்குமேல் ஸ்த்ரீகளுக்கு ரஜஸ்வலை என்று பெயராதலால், அவளைத் தாநம் செய்தவனுக்கு ரௌரவ நரகம் வருகிறதென்று சொல்லியிருக்கிறபடியாலும், ஸ்ரீதரீயத்தில், 'ஊகாஉயாஷாஓாஙஷ ஊதஉஉ-நஉாஜாஉபஷாஹவெக। ததஷஉ வரஷஸீ ஷாஷூாக ஷாஹூாயொநியஉதஹுஸிய:॥ தஷுதஉா வரஷஸீநாய: மஹிஉதஷஷவஉகஜஉஷ॥' என்கிற வசநத்தினால் பதினோராவது வயது முதற்கொண்டே ஸ்த்ரீகளுக்கு 'ஊதஉஉ-நஉாஜா' (ருதுவோடு கூடினவள்) என்று பெயரிட்டு அவளை விவாஹம் செய்துகொண்டவனை ஸர்வ கர்மங் களுக்கும் அநர்ஹன் என்று தூஷித்துமிருப்பதால் பதினோராவது வயது முதல் ஸ்த்ரீகளுடைய விவாஹம் எப்படி சாஸ்த்ர ஸம்மதமாகும்? ஆகை யினால் 'வூாவெுதஉ' என்பது முதலான வாக்யங்கள் பன்னிரண்டாவது வயதில் ஸ்த்ரீகளைத் தாநம் செய்தவனுக்குத் தேஹம் போன பிறகு லோ காந்தரத்தில் சோணித பாநம் முதலான ப்ரத்யவாய விசேஷத்தைச் சொல்ல வந்ததே யல்லது பதினோராவது வயது வரையில் விவாஹத்திற்குச் சாஸ்த்ர ஸம்மதியைச் சொல்ல வந்ததல்ல. இந்த விஷயத்தைத் தசநிர்ணயத்தில் ஸ்ரீவைதிக ஸார்வபௌமர் வ்யக்தமாகவும், விஸ்தாரமாகவும் உதாஹரித் திருக்கிறார்.

இதனுல் 'உபாயநொஷிதஃ காலஃ ஸ்த்ரீணாம் ... ஸ்த்ரீணாம் ... விவாஹஃ ...' என்பது முதலான வ்யாக்ரபாதாதி வசநங்களினுல் புருஷனுடைய உபநயந காலமே ஸ்த்ரீகளுக்கு விவாஹ காலமாய் ஏற்படுகிறது. '... ஸாவித்ரீ நாதிவர்த்ததே' என்று மநுஸ்ம்ருதியில் பதினுருவது வயது வரையில் ப்ராஹ்மணபுருஷனுடைய உபநயநத்திற்குக் கௌணகாலஞ்சொல்லியிருப்பதால் மேற்படி ஸ்த்ரீகளுக்கு உபநயந ஸ்தாநாபந்நமான விவாஹத்தை மேற்படி பதினுருவது வயது வரையிலும் செய்யலாமென்று சிலர் சொல்வதும் ப்ரமாண மாகாதென்று நிச்சயிக்கிறேம். அப்படியானுல் கீழ் உதாஹரித்த நிஷேத வாக்யங்களுக்கு விரோத முண்டாகு மல்லவா? மநு ஸ்ம்ருதியில் '... ஹ்ருத்யாம் ...' என்பது முதலான வாக்யங்களினுல் பன்னிரண்டு வயதுள்ள ஸ்த்ரீகளுக்குங்கூட விவாஹம் ஸம்மதமாகச் சொல்லியிருப்பதும் ப்ராஹ்மண ஜாதி கந்யகையைத்தவிரமற்ற ஜாதி ஸ்த்ரீ விஷய மென்றே நிச்சயிக்க வேண்டும். கீழ் உதாஹரித்த '... ரோஹிணீ । ... ரஜஸ்வலா ॥' '... ' என்றும், பதினேராவது வயது முதல் ஸ்த்ரீகளுக்கு 'ரஜஸ்வலை' என்று பெயரிட்டு '... ப்ராஹ்மணோ ... ' என்பது முதலான வாக்யங்களிலும் ப்ராஹ்மணனுக்கே, மேற்படி ஸ்த்ரீகளுடைய விவாஹத்தில் அஸம்பாஷ்யத்வ அபாங்க்தேயத்வாதிகளைச் சொல்லியிருப்பதாலும் இதைப்போலப் பன்னிரண்டு வயதுள்ள கந்யகையை க்ஷத்ரியன் பண்ணிக்கொள்ளக் கூடாதென்று சொல்லுகிற வசநங்களைக் காணுமையாலும், ருதுமதியான சகுந்தளாதி விவாஹத்தை மஹாதார்மிகனுன துஷ்யந்தாதி ஸார்வபௌம க்ஷத்ரியன் செய்துகொண்டதை லோகத்தில் ஒருவரும் நிந்திக்கக் காணுமையாலும், புராணுதிகளில் '... காலஃ ...' என்று ப்ராஹ்மணுதி விஷயத்தில் சொல்லப்படுகிற கால தர்ம நியமங்கள் சூத்ர ஸ்த்ரீகளுக்குச் சொல்லப்படவில்லையென்றிருப்பதாலும், பதினேரு வயதுக்கு மேல் விவாஹம் செய்யக்கூடாது என்பது முதலான கீழ்ச் சொல்லப்பட்ட கால நியமங்கள் ப்ராஹ்மணமாத்ர விஷயங்கள் என்று சொல்வதே உசிதமாகும்.

இந்தப்போலவே '...' என்று மநுஸ்ம்ருதியில் ப்ராஹ்மணனும் காந்தர்வ விவாஹம் செய்துகொள்ளலாமென்று எழுதியிருப்பதால், ருதுமதீ விவாஹத்தை ப்ராஹ்மணன் செய்துகொள்வதும் தர்ம்யமாகுமென்று சிலர் சொல்வதும் யுகாந்தர விஷயம். பாரதம் ஆதிபர்வத்தில், 'விவாஹே ப்ராஹ்மணாநாம் ... தைவமார்ஷ...

க:' என்றும், 'காந்தர்வேண விவாஹேந ந ஹ்யஸாவிதி' என்றும் ப்ராஹ்மணன் காந்தர்வ விவாஹம் செய்துகொள்ளக்கூடாதென்று பராசரர் நிஷேதித்திருப்பதால், 'கலௌ பாராஶரா: ஸ்ம்ருதா:' என்கிறபடியே இந்தக் கலியுகத்திற்காகவே ப்ரமாணமென்று சொல்லப்பட்ட பராசர வாக்யத்திற்கு விருத்தமாகக் கீழ்ச் சொன்ன மநு ஸ்ம்ருதி வசநம் 'க்ருதே து மாநவா தர்மா: த்ரேதாயாம் கௌதமா: ஸ்ம்ருதா:। த்வாபரே ஶங்கலிகிதா: கலௌ பாராஶரா: ஸ்ம்ருதா: ॥' என்கிறபடியே க்ருத யுகத்திற்கு ப்ரமாணமாகுமே யல்லது இக்கலி யுகத்திற்கு ப்ரமாண மாகாது. ஆகையால், 'த்ரீணி வர்ஷாண்ய்ருதுமதீ காங்க்ஷேத பித்ருஶாஸநம்' 'ஸ்வயம் அவாப்ததாம் வர்ஷம் தாவச்சைவைதஸ்யாதுந। நதத்தாம் ஸம்யக்தாம் வித்யாத் உதஸ்வாயம் ஸ்வேச்சயா வ்ருணீத' என்பது முதலான ருதுமதீ விவாஹத்தைச் சொல்லுகிற வசநங்களும் பூர்வோக்த வசநங்களுக்கு விரோதமில்லாதபடி ப்ராஹ்மணேதர விஷயங்கள் என்றாவது யுகாந்தர விஷயங்களென்றாவது வ்யவஸ்தாபநீயங்கள்.

அப்படியே கண்டபூஷணத்தில் 'ஸுவர்ணாதிபே' என்றாரம்பித்து 'ஸர்வம் ஸகாத்யவயஸ்காம் கந்யாம் ஶிக்ஷேத: பித்ருஶாஸநம் வேஸா கந்யா தாதாஸஹாத்ரிஹிரவிதேபா' என்பது முதலான வசநங்களினால் ஸ்த்ரீகளுக்குப் பதினொரு வயதில் விவாஹத்தை அங்கீகரித்திருப்பதும், பத்தாவது வயதின் கடைசியிற் செய்வதாக நிச்சயிக்கப்பட்டிருந்த விவாஹம் தைவிகமான வ்யாதி முதலியவற்றால் விக்நிதமான விஷயத்தில் பதினோராவது வயதின் ஆரம்பத்திலும் செய்வது ஆபத் கல்பமாகச் சாஸ்த்ர ஸம்மதமாகுமென்று சொன்னபடி. அப்படியில்லாத பக்ஷத்தில் தசநிர்ணயாதிகளில் பத்தாவது வயதிற்குமேல் ப்ராஹ்மண கந்யகையின் விவாஹம் நிஷித்தமென்று நிர்ணயித்திருப்பதற்கு விருத்தமாக ஒரே க்ரந்த கர்த்தா மற்றொரு க்ரந்தத்தில் பதினொரு வயதிலும் விவாஹத்தை அங்கீகரித்திருக்கிறார் என்று சொல்வது அஸங்கதமாதுமன்றோ? ஆகையினால் ஸர்வ ஜாதி ஸ்த்ரீகளுக்கும் எட்டு வயதில் விவாஹம் செய்வதே முக்ய கல்பமென்றும், ஒன்பதாவது பத்தாவது வயதில் விவாஹத்தைச் செய்வது கௌணமென்றும், அதற்கு மேல் ப்ராஹ்மண கந்யகை விஷயத்தில் பதினோராவது வயதின் ஆரம்பத்தில் விவாஹம் செய்வது அத்யந்த ஆபத் கல்பமென்றும், அதற்குமேல் செய்வது நிஷித்தமென்றும், யுகாந்தர விஷயமென்றும், க்ஷத்ரியாதி ஸ்த்ரீ விஷயத்திலும் பன்னிரண்டாவது வயது முதல் விவாஹம் செய்வதும் ருதுமதியான பிறகு விவாஹம் செய்வதும் கௌணதர கௌணதமங்கள் என்பதும் சாஸ்த்ர ஸம்மதமான விஷயங்களென்று நிச்சயிக்கப்படுகிறது. (தொடரும்)

263
335

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## ஆபத் கால முறை.

ஸ்ரீ. வே தீ. ஸம்பாதகருக்கு.—

சில நாட்களாக இந்தத் தீபிகை மூலம் ப்ராஹ்மணர்களின் தத்கால நிலைமையை விசாரித்துச் சில ஸாதுக்கள் அநுதாபப்பட்டு வருவது தீபிகாபிமாநிகளனைவர்க்கும் தெரிந்த விஷயம். ஸர்வ லோக சரண்யன் தன் லீலார்த்தமாகக் கொண்டு இவ்விபூதியை யதேச்சம் நியமித்து நடத்தி வருவதில், சில 'மஹாத்மாக்களும்' 'லோக பந்துக்களும் ''பண்டிதர்களும்' ஜந்மாந்தர கர்ம பலமாக இந்த லோகத்தில் ஒரு பதவி பெற்று பாமர ரஞ்ஜகமாக சாஸ்த்ரார்த்தங்களை உண்டாக்கி, குருடனுக்குக் குருடன் வழிகாட்டி இருவரும் கடைசியாகப் படுகுழியை நாடி விரைந்தோடுவது போல த்வரியா நின்றால், இதுவும் அவர்கள் கர்மாநுகுணமான சரண்ய ஸங்கல்பமே அன்றோ? பரம பாகவதனும் ராஜகுல பூஷணனுமான பரீக்ஷித் ப்ரபு கலி புருஷனை நிக்ரஹித்துப் போர, அந்தக் கலி புருஷன் சரணாகதனாய் ''காப்பாற்று காப்பாற்று' என்று கை கூப்பி நிற்குமளவில், அந்த ப்ரபு அவனுக்கு ப்ராண பிக்ஷை தந்ததோடல்லாமல், அவன் ப்ரார்த்தனையை அநுஸரித்து, த்யூதம் பானம் முதலிய சில ஸ்தானங்களை அவனுக்கு இருப்பிடமாகக் கல்பித்தும் கொடுத்தார். பாம்புக்கு இடம் கொடுத்தாப் போல ஆகிவிட்டது இந்த அஸ்தான காருண்யம். பின்னும் அவனை அடக்கி ஆளும் தீர புருஷன் செங்கோல் எடுக்கும் நாளன்றோ அவன் நடுக்கமுற்று அடங்குவது?

இதற்கு மாறாக எங்கும் கலி புருஷனுக்கு வாஸ ஸ்தானங்கள் அஸங்க்யேயங்களாக இப்பொழுது ஏற்பட்டு வருகின்றன; கை நழுவும் போலிருந்த ஏகசக்ராதிபத்யம் அவனுக்குத் தன்னடைய கிடைக்கின்றது. வேத பாஹ்யர்களாயும், பகவத் பக்தி வர்ஜிதராயும், ஸர்வதர்ம பஹிஷ்க்ருதராயும், ஆஹார நித்ராதிகளில் அஸங்குசித ப்ரவ்ருத்தி உள்ளவர்களாயும், ஸாதுக்களுக்குக் கொடுமையையே விளைவிப்பவர்களாயும் இருக்கும் பல ப்ரபுக்கள் கலி புருஷன் செங்கோலை தீவ்ரமாக வ்ருத்தி பண்ணிக் கொண்டு வருவதை எல்லாரும் பார்க்கலாம். அபலைகள் ராஜ்யாதிகாரங்களை வஹிப்பதும், ஜ்ஞாந சூந்யர்கள் ஜ்ஞாந வ்ருத்தர்களை ஆக்ஷேபித்து விஞ்சுவதும், சாஸ்த்ர ஸம்மதமான விவாஹங்கள் உபருத்தங்களாய் சாஸ்த்ர கர்ஹிதங்களான விதவா விவாஹம் முதலியவை ஓங்குவதும், இவை யெல்லாம் கலியின் செங்கோலுடைய லக்ஷணங்களல்லவா? இவை யெல்லாவற்றையும் முன்னின்று நடத்தி வைக்கும் பெரியோர்கள் ப்ராயேண நம்மவர்களே. அவர்கள், காலசோதிதர்களாய், சாஸ்த்ரீய விஷயங்களில்

வைமுக்யத்தைக்கொள்வதுடன், பகவத் பாகவத விஷயத்தில் த்வேஷ புத்தியையும் கொண்டு நிற்கிறார்கள். அவர்களை அந்த மார்க்கத்திலிருந்து மீட்கத் தேடுவது வ்யர்த்தமே யாகும்.

இந்தத் துர்த்தசையில் நாம் செய்யவேண்டுவது யாது? இந்த அஸாதுக்களுடன் சச்சரவு முதலியது செய்வதை நிறுத்தி, கேவலம் ஸத்வத்தைக் கைப்பற்றி தாந்தர்களாய் எம்பெருமானுடைய திருவடிகளில் லயித்த மனத்துடன் இருப்பதே நமக்கு உசிதமான மார்க்கமென்று தோன்றுகிறது. தீபிகை முதலிய பத்ரிகா மூலமாக, சரண்யன் தின்கழல் சேரும் பக்தியை ஊட்டக்கூடிய அப்பெருமானது குணங்களையும் சேஷ்டிதங்களையும் ஸரளமான நடையில் அடிக்கடிப் பராமர்சித்து வந்தால் இன்னும் வகை தவறுமலிருக்கும் சிலர்களாவது ஒரு கால் அது வழியால் அச்சரண்யனிடம் அபிநிவேசம் பெற்று அவன் மநநத்தில் அகப்பட்டு உஜ்ஜீவநத்தைப் பெறுவார்களோ என்பது நமது ப்ரத்யாசை. இது ஒன்றைத் தவிர்த்து வேறு உசிதமான உபாய மொன்றும் நமக்குத் தோன்றவில்லை. கேவலம் சிந்தாக்ராந்தர்களாய் வருந்துவதும் சரண்யனுடையத் திருவுள்ளத்திற்கு உகப்பாக மாட்டாது. நம்முடைய உபாயங்க ளெல்லாவற்றையும் கடந்து கால வைபரீத்யத்தால் தூர்த்தர்கள் ப்ரபலிக்க நேரிடினும், 'எல்லையில்லா தொன்னெரிக்கண் நிலைநின்ற தொண்டரான அறந்திகழு மனத்தவர்'' ரக்ஷணார்த்தமாகவே எப்பொழுதும் கைக் கழலா நேமியானாய் வீற்றிருக்கும் சரண்யன் ஒரு பொழுதும் நம்மைக் காட்டிக் கொடுத்து விடான். மஹத்தான ஆபத் ஸம்ப்ராப்தமான இத்தருணத்தில் அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்யனுடைய திருவடிச்சேர்யையைத் தவிர்த்து வேறு நிஸ்ஸம்சயமான உபாய மில்லாததால், அவனுடைய ஸௌலப்யாதி குணங்களை விஸ்தரேண பெரியோர்களிடமிருந்து தீபிகை மூலம் அடியேனும் கேட்டு ஆநந்திக்கலா மென்னு மவாவுடன் இந்த விண்ணப்பத்தைச் செய்து கொண்டேன். இதனால் ஏற்படும் அபராதங்களெல்லாவற்றையும் காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்களாய் பெரியோர்களெல்லாரும் க்ஷமித்தருளி, என் கருத்தறிந்து அடியேனை அநுக்ரஹிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

லாபான், ஷில்லாங்
14—7—1929

ஏ. எஸ். சக்ரவர்த்தி ஐயங்கார்.

(2)

## உபய வேதாந்த ப்ரவர்த்தந ஸபை, பங்களூர்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு.—

சென்ற மேமீ 12வ ஸாயம் நாலரை மணிக்கு, பங்களூர் உபய வேதாந்த ப்ரவர்த்தக ஸபையின் இருபத்தெட்டாவது வார்ஷிக ஸங்கம், மேல்கோட்டை ஸ்ரீ நாராயணப் பெருமாள் ஸந்நிதியில் நடைபெற்றது. பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராய் எழுந்தருளி இருக்கும் ராயம்பேட்டை ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமாநுஜ தேசிகன் அந்த ஸங்கத்தின் அத்யக்ஷத்வத்தை வஹித்தார். பாரிதோஷிகங்கள் கொடுக்கும் காலத்தில்

அநேக புமான்களும் ஸ்வல்ப ஸ்த்ரீகளும் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக் இருந்தார்கள். ஸங்கத்தை அலங்கரித்த வித்வாங்களுள் முக்யமானவர்களுடைய நாமதேயங்கள்.—

1. மஹாமஹோபாத்யாயர் பண்டித ரத்நம் மஹாவித்வாங் லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

வித்வாங் டி. எ. எம்பெருமானர் ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத காலேஜ் அத்யக்ஷர்
,, ஜயராம வெங்கடாசார்ய ஸ்வாமி
,, தே. ராமாநுஜாசார்ய ஸ்வாமி
,, புரோஹித திருநாராயண ஐயங்கார் ஸ்வாமி
,, ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி
,, ஜநார்த்தந ஐயங்கார் ஸ்வாமி
,, ஸாங்க்யதீர்த்த ஜ. வெங்கடாசார்ய ஸ்வாமி
,, ஸ்ரீநிவாஸ கோவிந்தப்பங்கார் ஸ்வாமி
,, திருவாய்மொழி ராமாநுஜாசார்ய ஸ்வாமி
,, அக்கரகண்ணி ராமாநுஜாசார்ய ஸ்வாமி
,, கூரம் திருவேங்கடாசார்ய ஸ்வாமி

அநேக ஆஸ்திக லௌகிக அதிகாரிகளும் க்ருபையுடன் அப்பொழுது அவ்விடத்தில் இதற்காக எழுந்தருளி இருந்தார்கள். ஸபையின் கார்யதர்சியாகிற ராவ் பஹதூர் ஆர். நரஸிம்ஹாசார்யரால் வார்ஷிக அறிக்கை படிக்கப்பட்ட பிறகு, ஸபையின் பரீக்ஷையில் நிஷ்பத்தி அடைந்த பரீக்ஷிதர்களுக்குப் பாரிதோஷிகங்கள் கொடுக்கப்பட்டன. 36 வித்யார்த்திகள் பரீக்ஷையில் அந்வயித்தார்கள். அவர்களுள் ஒருவர் வேதாந்த உத்தம பரீக்ஷையிலும், ஒருவர் வேதாந்த மத்யமத்திலும், எட்டுப் பெயர்கள் திவ்ய ப்ரபந்தத்திலும், ஒருவர் வேதத்திலும், இருபத்திரண்டு பெயர்கள் ப்ரவேசக பரீக்ஷையிலும் தேறினார்கள். மொத்தம் ரூ. 519 பாரிதோஷிகமாகக் கொடுக்கப்பட்டது. ஸபையின் பரீக்ஷையை உத்தேசித்து வித்யார்த்திகளுக்கு ப்ரவசநம் செய்த மூன்று ப்ரவசநாதிகளுக்கும் ஸம்பாவனை செய்யப்பட்டது. சென்னை ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீ.வி.ரங்கநாதம் செட்டியார் அவர்களால் புஸ்தகரூபமான பாரிதோஷிகமும், ஸ்ரீ. உப எம்.கே. அநந்தாழ்வார் ஸ்வாமியால் ஸ்ரீ செல்வப்பிள்ளைப் பெருமாளின் படங்களுள் இருபதிணைந்து ப்ரதிகளும் வித்யார்த்திகளுக்குக் கொடுக்கப் ட்டன. பாரிதோஷிக ப்ரதாநம் முடிந்தவுடன் அநேக பண்டித உபந்யாஸங்கள் நடந்தன. ஸங்கத்தின் அத்யக்ஷத்வத்தை வஹித்த ஸ்வாமிக்கு க்ருதஜ்ஞதாவிஷ்கரணமும் மைஸூர் மஹாராஜர் அவர்களுக்கு மங்கள ப்ரார்த்தனையும் நடந்த பிறகு ஸங்கம் கலைந்தது.

மல்லேச்வரம், பங்களூர்,
14—5—1929.

ஆர். நரஸிம்ஹாசார்யர்.

[இந்தக் கடிதத்தை சென்ற மே மாஸத்திலேயே நாம் வரப்பெற்றோம். ஆனால், அநேக ப்ரதிபந்தகங்களால் அதன் முத்ரணம் இவ்வளவு காலம் விளம்பித்துவிட்டது. இதைப் பற்றி நாம் ஹார்த்தமாக சோகிக்கிறோம். ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகன்.]

(3)

## பிழை திருத்தம்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு .—

(1) சென்ற ஆனி மாஸத்திய ஸஞ்சிகையில் க்ருத்திகா தீபோத்ஸவ விசாரத்தில் 258-வது பக்கம் 30-வது வரியில் 'வரெசஹி' என்பது 'சுவரெ திவஸெ' என்று இருக்க வேண்டும்.

(2) சென்ற ஆடி மாஸத்திய ஸஞ்சிகையில் உபாகர்ம விசாரத்தில் 291-வது பக்கம் 22-வது வரியில் 'மல மாஸ ம்ருத ப்ரதமாப்திக' என்பது 'மலமாஸ ம்ருத ப்ரத்யாப்திக' என்று இருக்கவேண்டும்; 'சாந்த்ர மாஸ ம்ருத ப்ரத்யாப்திக விஷயத்தில் போலவுட' என்பது அவ்விடத்தில் சேர்க்கப்படவும் வேண்டும்.

(3) அதே ஸஞ்சிகையில் 292-வது பக்கம் 13-வது வரியில் 'ஸம்ஸர்ப்பத்திலும்' என்பது 'ஸர்வத்திலும்' என்றும், 293-வது பக்கம் 17-வது வரியில் 'வ்ரதஹ்யாவஹமழ' என்பது 'வ்ரதஹ்யாவஹமழ' என்றும் இருக்கவேண்டும்.

மதுராந்தகம்
ஆவணிமீ 1வ } கருடபுரம் தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்யர்.

---

ஸ்ரீ:

# புஸ்தக விமர்சம்.

## ஸ்ரீமத் கீதா பாஷ்யம்.

---

திவான்பஹதூர் ஸ்ரீ. உப. வி. கெ. ராமாநுஜாசார்யரால் செய்யப்பட்ட தமிழ் உரையுடன் கூடிய ஸ்ரீமத் கீதா பாஷ்யத்தின் மூன்றாவது பாகம் வெளி வந்து விட்டது. இதனுடன் பாஷ்யம் முடிவு பெறுகிறபடியால் அதன் உரையும் முடிவடைந்து விட்டதென்றே நாம் நினைக்கிறோம். இத்தமிழ் உரை எழுதியதால், ஸ்ரீ. ராமாநுஜாசார்யர், ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்திற்கே ஓர் பேருதவியைச் செய்திருக்கிறார். இது, ஸம்ஸ்க்ருத ஜ்ஞான மில்லாதவர்களுக்கு பாஷ்யார்த்தத்தை அறிவிப்பதில் உபகாரகமாக இருப்பதுபோல, ஸம்ஸ்க்ருத ஜ்ஞானமுடையவர்களுக்கும் ஸந்தேஹ நிர்ணய அம்சத்தில் மிகவும் உபகரிக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை. பகவத்

பாஷ்யகாரரால் வெளியிடப்பட்டிருக்கும் அர்த்தத்தை இந்த உரை உள்ளபடி சொல்லுகிறபடியாலும், வ்யங்க்யமான அர்த்த விசேஷங்களை பாஷ்யகாரருடைய ஹ்ருதயத்துக்கு ஒத்தபடி ப்ரகாசிப்பிக்கிறபடியாலும், இவையெல்லாவற்றையும் நாம் ப்ரதி திநம் பேசும் எளிதான தமிழ் நடையிலேயே விவரிக்கிறபடியாலும், இந்த க்ரந்தத்தை நாம் மிகவும் ஆதரிக்கிறோம். பாஷ்யத்தின் உரை மாத்ரமின்றிக்கே அநேக இடங்களில் இவர் ஒரு டிப்பணியும் எழுதி இருக்கிறார். அந்த டிப்பணி அதி ஸூக்ஷ்மமாயிருக்கும் அர்த்தங்களை ஸாமாந்ய ஜநங்களுக்கும் தெளிய விளங்கும்படி விவரிப்பதுடன், அது அமாயமாகவும் சுத்தமான மநோ பாவத்துடனும் எழுதப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்த்து நாம் ஆநந்திக்கிறோம். இதற்கு நிதர்சநமாக ஓரிடத்தை மாத்ரம் நாம் சுட்டிக் காண்பிக்கத் துணிகின்றோம். பதினாலாவது அத்யாயம் இருபதாவது ச்லோகத்தின் பாஷ்ய பங்க்தியாகிற "ஜ்ஞாநைகாகாராத்மஸாக்ஷாத்காரம் வஸ்ந்து ஜெஹீ ஞாநாந்தே ஹவதி; ஸோஷ ஸஹாவ:' என்னும் வாக்யத்தை விவரிக்குமிடத்தில், ஆத்ம விஷயகங்களான க்ரந்தங்களைப் படித்து ஆத்மாநுபவம் செய்து கொண்டிருப்பதாகத் தம்மை நினைத்துக் கொண்டிருக்கும் சில வித்வான்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:—"ஆத்ம விஷயமான புஸ்தகத்தைப் படிக்காதவர்கள் ஸம்ஸாரக் கவலையினால் எப்பொழுதும் வருத்தப்படுகிறார்கள். ஆத்மாவைப் பற்றின சாஸ்த்ரங்களைப் படித்த வித்வான்கள் ஸம்ஸாரக் கவலையினாலும், நான் படித்தவன் என்கிற எண்ணத்தினால் உண்டாகும் சண்டைகளாலும், அதற்குப் புஸ்தகம் எழுதுகிற ச்ரமங்களாலும் தொந்தரவு படுகிறார்கள். படிக்காதவர்களும் படித்தவர்களும் ஆத்ம ஸ்வரூபத்தை அறியவில்லையே! ...இவ்வுலகத்தில் ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர் அகப்படுவதே வருத்தம்; அப்படி அகப்பட்டாலும், இக்காலத்திய வித்வான்கள் அவரை அறிந்ததாக நினைப்பதும் அவருடன பழகுவதும் ஒருக்காலும் நடக்கவே நடக்கமாட்டாது. வித்வான்களுக்குக் கோபம் பொறாமை முதலான ஸங்கதி போகாதவரையில் அவர்கள் ஆத்ம ஸ்வரூபத்தை அறியவில்லை என்றே சொல்லவேண்டும்...வித்வான்கள் தங்களுடைய குற்றங்களைக் கவனிக்காத வரையில் அவர்கள் ஸுகத்தை அடையமாட்டார்கள்". இது நிஷ்கபடமான வார்த்தை. சுத்தமான மநோபாவத்துடன் சொல்லப்பட்டிருக்கும் இந்த வார்த்தையை நமது வித்வான்கள் கவனித்தல் வேண்டும். "பத்யஸ்ய ச வயஸ்யஸ்ய வக்தா ச்ரோதா ச துர்லப:". [இந்த ஸஞ்சிகையின் விலை அணா 12. அபேக்ஷிப்பவர்கள் "ஸி. ர. ஸ்ரீநிவாஸ பாட்ராசார்யர், 16 பாட்ராசார்யர் தெரு, கும்பகோணம்" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# ஸம்பாதகீயம்.

“ வரம் ஹுதவஹஜ்வாலாபஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி: ”
ந வாஸ: ஸ்வமதநிரோகேபி சஞ்சரா ருஷிபி: ஸஹ ॥

**அதர்மங்களின் வ்ருத்தி.**

விசித்ரமான ப்ரவாஹத்தை உடைய கர்ம கதியின் நடுவில், நமக்குச் சில ஸமயங்களில் விசேஷஜ்ஞர்களுடன் ஸம்ஸர்க்கமும் மற்றும் சில ஸமயங்களில் அஜ்ஞர்களுடன் ஸம்ஸர்க்கமும் நேர்கின்றன. விசேஷஜ்ஞர்களுடன் ஸம்ஸர்க்கம் நேர்வது மிக ச்லாக்யம்; அஜ்ஞர்களுடன் கூடும்படி ஸம்பவிப்பதையும் நாம் ஒருவாறு பொறுத்துப் போகலாம். இவை இரண்டு மன்றிக்கே துராக்ரஹிகளாயுள்ள மூடர்களுடைய மத்யத்தில் வஸிக்கும்படிக்கும், கார்யாகார்யங்களில் அவர்களால் நியமிக்கப்பட்டு வரும்படிக்கும், நமது க்ரூரமான கர்ம கதி நம்மைச் சில ஸமயங்களில் நயிப்பிக்கின்றதே! அது எவ்வாறு ஸஹ்யமாகும்?

அபமாதிரியான அவஸ்தை, ஸநாதந தர்ம விச்வாஸிகளான நமக்கு இப்பொழுது நேர்ந்திருக்கின்றது. சாஸ்த்ரங்களில் விச்வாஸமின்றிக்கு யுக்தி பலத்தையே ஆதாரமாகக்கொண்டு தர்மாதர்ம நிர்ணயம் செய்ய ப்ரவ்ருத்திக்கும் ஜநங்களால் நாம் நாற்புறங்களிலும் சூழப்பட்டிருக்கிறோம். அந்த ஜநங்கள் கேவலம் அறிவற்றவர்களாக இருக்கும் பக்ஷத்தில், அவர்களை ஏதாவது ஒரு உபாயத்தால் ஸமீகரணம் செய்துகொண்டு நம்முடைய தர்மங்களுக்கு உபஹதி நேரவொட்டாமல் ஒருவாறு நாம் நடந்துவரக்கூடும்.

அவர்கள் அவ்விதம் அறிவற்றவர்களாக இல்லை; பால்யத்தில் ஸ்வல்ப புத்திப் பயிற்சியைப் பெற்று வயது வந்தபொழுது விதி வசத்தால் துராக்ரஹத்திற்குப் பாத்ரமாகி, தமது புத்திக்கு எட்டின வரையில் யுக்தி விசாரம் செய்யச் சக்தியை உடையவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், அந்த யுக்தி தவறிப் போகக்கூடியது என்பதைத் அவர்கள் அறிகிறார்களில்லை; மற்றவர்களால் எடுத்து உரைக்கப்படும் உபபத்தி அநுபபத்திகளைச் செவிகொடுத்துக் கேட்கவொட்டாமலும் அவர்களுடைய துராக்ரஹம் அவர்களைத் தடுக்கின்றது. "தூஷ்ணீம்" என்று அவர்கள் விஷயத்தில் நாம் உதாஸீநர்களாக வர்த்தித்து வருவோமென்றால் அதுவும் ஸாத்யமில்லாமல் இருக்கின்றது. தமக்குத் தர்மமாகத் தோன்றும் அதர்மங்களைத் தாம் அநுஷ்டித்து வருவது மாத்ரமின்றிக்கே, மற்றவர்களையும் அவைகளைத் தர்மமென்று அநுஷ்டித்து வரும்படி பலாத்கரிக்கவும், அவர்கள் புகுகிறார்கள். அதை நாம் எப்படி ஸஹிக்கக்கூடும்?

இதற்கு நிதர்சநமாக அவர்களுடைய ப்ரவ்ருத்திகளுள் ஒன்றை மாத்ரம் நாம் இவ்விடத்தில் கூறுவோம். அவர்களுடைய யுக்தியின் ப்ரகாரம், கந்யகைகளுக்குச் சாஸ்த்ரோக்தமான வயஸ்ஸில் விவாஹம் செய்வது நிந்திக்கத்தக்க கார்யமாம். அப்படி யாராவது விவாஹத்தைச் செய்வித்தால், அதைச் செய்விக்கிறவன் ராஜதண்டனைக்குப் பாத்ரமாகவேண்டுமாம். இவ்விதம் ஒரு சட்டத்தை ஏற்படுத்த அவர்கள் மஹத்தான ப்ரயத்நத்தைச் செய்து வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ப்ராயேண இன்னும் இரண்டொரு தினங்களுக்குள்ளாக அது சட்டமாகவும் பரிணமித்து விடலாம். அப்பொழுது, நாம் ராஜாஜ்ஞைக்கு உட்பட்டு நமது கந்யகைகளுக்கு அவர்கள் ப்ரௌடைகளான பிறகு விவாஹத்தைச் செய்து வைப்பதான அதர்ம கார்யத்தையாவது செய்யவேண்டும்; இல்லாவிட்டால் ராஜாஜ்ஞையை மீறி கந்யகைகளுக்குச் சாஸ்த்ரோக்தமான வயஸ்ஸில் விவாஹத்தைச் செய்வித்து, ராஜாஜ்ஞையை மீறினதற்காகக் காராக்ருஹத்திற்காவது போகவேண்டும். பூர்வ காலங்களில் கம்ஸாதிகளால் இம்மாதிரி உபத்ரவங்கள் ஸம்பவித்த பொழுது, சிலர்,

"தை்வீயிதா நிவிவிஶுஃ கூரூவூராஂஆருகெகூயாநு"

என்று அப்பீடையை ஸஹிக்கமாட்டாமல் தேசாந்தரம் ஓடினார்களென்றும், மற்றும் சிலர், அதிமாத்ரம் தீநர்களாய்,

"ஶாகெ தஶூூயாநா ஜூாதயஃ வயூஶூவாஶதெ"

என்று ஹ்ருதயத்தில் நிர்வேதத்தை அடைந்தவர்களாய்க் கம்ஸாதிகளை அநுவர்த்தித்துக் கொண்டு அவர்களுடைய இஷ்டப்படி நடந்து வந்தார்களென்றும் நாம் புராணங்களிலிருந்து அறிகிறோம். இப்பொழுது நாம் ஓடுவதற்குத் தேசாந்தரம் இல்லை. வேறு என்ன செய்யப் போகிறோமோ வென்பதை இப்பொழுது யார் சொல்லக்கூடும்?

இதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிக உக்ரமான அதர்மங்களும் சீக்ரத்திலேயே நம்மைப் பாதிக்கு மென்று நமக்குத் தோன்றுகிறது. இப்பொழுது தேசாந்தரங்களில் மிகவும் ஆச்சர்யகரங்களான மனோபாவங்கள் காட்டாற்று ப்ரவாஹம் போலப் பரவி வருகின்றன. ஸ்த்ரீ புமாங்கள் பரஸ்பரம் விவாஹம் செய்துகொண்டு ஒரு விதமான வ்ரதத்துடன் வர்த்தித்து வரவேண்டும் என்பது முதலான நியமங்களெல்லாம் யுக்திக்கு விருத்தங்களாக இருக்கின்றனவாம்; எல்லாரும் தங்கள் தங்கள் இச்சை ப்ரகாரம், யாவத் த்ருப்தி, ப்ரஜோத்பத்திக்கு இடமில்லாமல், இஷ்டப்பட்ட ஜனங்களுடன் விஹரித்து விட்டு, பிறகு ஸந்ததி அபிவ்ருத்தியில் அபிலாஷை தோன்றினால், அப்பொழுது இஷ்டப்பட்ட ஒரு ஜனத்தை விவாஹம் செய்துகொண்டு, பதி பத்நிகளாக, இஷ்டமிருக்கும் வரையில், வர்த்தித்து வருவதே யுக்தி ஸஹமாம். இத்யாதியான விசித்ரங்களான எண்ணங்கள், தேசாந்தரங்களில், அநேக வித்வஜ்ஜனங்களுடைய மனஸ்ஸில் கூட ஸ்வல்ப காலமாக த்ருடமாய் உதித்து வருகின்றன. சீக்ரத்திலேயே அந்த எண்ணங்கள் ஸார்வஜநீனமாக அநுஷ்டானத்திலும் வந்து விடலாம். தேசாந்தர ஆசாரங்களைப் பார்த்து நமது ஆசாரங்களைச் சீர்திருத்தம் செய்ய ப்ரவ்ருத்திக்கும் ஸ்வபாவமுள்ள நமது பெரியோர்களும் எவ்வித விளம்பமுமின்றிக்கே நமது தேசத்திலும் அதை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயல்வார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. அந்த அநுஷ்டானத்தில் அருசி கொண்டிருக்கும் மற்ற ஜனங்களையும் சட்ட மூலமாகப் பலாத்கரித்து அதில் அவர்களை ப்ரவ்ருத்திப்பிக்கவும் அவர்கள் முயல்வார்கள். இம்மாதிரியான அவஸ்தையின் நடுவில் வஸித்து வருவதைக் காட்டிலும், தீயின் மத்யத்தில் வஸித்து வருவது ஸாத்யமானால் அது பல மடங்கு ஸுகாவஹமாகுமென்று நாம் ஏன் சொல்லக்கூடாது?

இவ்விதம் அதர்மங்களை ப்ரவ்ருத்திப்பிக்க ப்ரயத்நப்படும் நமது ஜனங்களிடம் நாம் எவ்வித த்வேஷ புத்தியையும் கொண்டாடுகிறோமில்லை. அவர்களுடைய ஆர்ஜவத்தைப்பற்றி நமக்கு ஒருவித சங்கையுமில்லை. 'அவர்களுடைய ப்ரவ்ருத்தி முடிவில் ஜகத்துக்கு அஹிதமாகப் பரிணமிக்கின்றதே! அறிவுள்ளவர்களாக இருக்கையிலும் இதை அவர்கள் அறிய

271



வில்லையே!' என்று மாத்ரம் நாம் சோகிக்கிறோம். அதுவும் நமது கர்ம கதியே. வஸ்துக்களின் ப்ராதிகூல்யங்களும் அல்பாநுகூல்யங்களும் அவரவர்களது கர்மாநுரூபமாக வன்றோ நடவா நிற்கின்றன ?

*　　*　　*　　*　　*

**நமது ஆசாரங்களின் நாசம்**

சென்ற ஸஞ்சிகையில், நமக்கு அஸாதாரணங்களாயிருக்கும் ஸதாசாரங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக நஷ்டங்களாகி வருகின்றனவென்றும், அவைகளின் ஸ்தாநத்தில் புதியவையும் ஜுகுப்ஸாவஹங்களுமான தேசாந்தரீய ஆசாரங்கள் வ்யாபித்து வருகின்றனவென்றும், இந்த வ்யாப்தி மேன்மேல் வ்ருத்தியாகும் பக்ஷத்தில் அது பெருத்த தீமைகளுக்குக் காரணமாகுமாதலால் அதைத் தடுப்பதற்கு உபாயமொன்று மில்லையாவென்றும் நாம் சோகித்து எழுதி இருந்தோம். நமது ஆசாரங்கள் எவ்வளவு தூரம் லுப்தங்களாகி விட்டனவென்பது, பத்தநங்களில் உயர்ந்த அதிகாரங்களைப் பெற்று மற்றவர்களால் அபர்யநுயோஜ்யர்களா யிருக்கும் ப்ரபுக்களுடைய அநுஷ்டாநங்களையும், பாஷாந்தராப்யாஸத்திற்காக மாதா பிதாக்களிருக்கும் இடத்தை விட்டு தேசாந்தரஸ்தர்களால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைகளில் அந்தத் தேசாந்தரஸ்தர்களுடையப் பராமர்சத்திற்கு உட்பட்டுக் கல்வி கற்று வரும் நமது பாலர்களுடைய நடவடிக்கைகளையும் பாராதவர்களுக்கு நன்கு புலப்படமாட்டாது. நடை உடை பார்வை இவை ஒவ்வொன்றிலும் நமது ஜாதீயர்கள் தேசாந்தரீயர்களுடைய ஆசாரங்களையே பூர்ணமாகப் பரிக்ரஹித்து விட்டார்கள். ப்ரத்யக்ஷத்தில் அசுத்தமாயும் தேஹத்தின் ஆரோக்யத்திற்கு அத்யந்தம் பாதகமாயும் இருக்கும் துராசாரங்கள் கூட அவர்களுக்கு அதி போக்யங்களாகிவிட்டன. ஜகத்தில் ஒவ்வொரு வஸ்துவும் தன் தனக்கு இயற்கையாயுள்ள தர்மங்களுடன் கூடியிருந்தால் மாத்ரம் அது அது சோபையுடன் ப்ரகாசிக்கின்றது, செழிப்புடன் வளர்ந்தும் வருகின்றது; தனக்கு இயற்கையல்லாத வேறு தர்மங்களை ஏறிட்டுக்கொள்ளும் பொருள்களெல்லாம் குத்ஸிதங்களாகவும் க்ஷயிக்கும் ஸ்வபாவமுள்ளவையாகவுமே காணப்படுகின்றன. நமது விஷயத்தில் மாத்ரம் இந்த ந்யாயம் விலக்காகுமோ? இப்பொழுது பரவி வரும் இந்தத் துராசாரங்களைத் தடுக்க ப்ரயத்நப் படாமல் நாம் உதாஸீநர்களாக இருந்து விட்டால், ஸ்வல்ப காலத்தில் நாம் எல்லாரும் ஒளி குன்றி விவேகிகளின் தன்மையையே இழந்துவிடுவோமென்பதில் ஆக்ஷேபமில்லை.

இந்த ஸந்தர்ப்பத்தில் நாம் செய்யவேண்டியது யாது? மிகவும் பயங்கரமாய் அடக்கக்கூடாத வேகத்துடன் வெள்ளம் பெருகி வரும்பொழுது நாம் நமது யாவத் ஸொத்தையும் ஸம்ரக்ஷித்துக் கொள்வது என்பது ஸாத்யமில்லை; முக்யமான சில அம்சங்களைக் காப்பாற்றிக்கொள்ள ப்ரயத்னப்படுவதே புத்திமத் க்ருத்யமாகும். அதுபோல, இப்பொழுது உத்பதத்தில் போயிருக்கும் எல்லாரையும் ஸன்மார்க்கத்துக்குத் திருப்புவது என்பது ஸாத்யமில்லாத கார்யம். அதிகாரத்தில் இருக்கும் லௌகிக ப்ரபுக்களை அவர்கள் போகும் வழியிலிருந்து திருப்ப ப்ரயத்னப்படுவது பரிஹாஸாஸ்பதமாகுமன்றோ? வயது முதிர்ந்தவர்களை விட்டுவிட்டு, இன்னும் காடிந்யத்தை அடையாமல் ம்ருதுவாக இருக்கும் புத்தியை யுடைய பாலர்களிடம் நாம் பரிச்ரமப்பட்டால், ஒரு கால் அந்தப் பரிச்ரமம் ப்ரயோஜநப்பட்டாலும் படலாம். பால்யத்திற் செய்யப்படும் பயிற்சியே பெரும்பாலும் வயது முதிர்ந்த பிறகும் அநுவர்த்திக்குமாகையால், நமது பரிச்ரமத்தின் பலமும் ஒருவித ஸ்தைர்யத்தை அடைந்து வருத்தியையும் அடையக் கூடும். ஆகையால், நமது ஆசாரங்களில் விச்வாஸத்தை உடைய பெரியோர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து, நமது பாலர்கள் படிக்குமிடம் போய் அவர்களுடைய வித்யாப்யாஸத்திற்கு எவ்வித இடைஞ்சலுமின்றிக்கே அவர்களுடையப் பராமர்சத்தை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு உரிய ஸதாசாரப் பயிற்சிச் சாலைகளை ஏற்படுத்தி, அநுஷ்டாந முகத்தாலும் உபதேச முகத்தாலும் அவர்களுக்கு ஸதாசாரங்களைப் பழக்கி வைக்க ப்ரயத்னப்படுவதே நாம் இப்பொழுது செய்ய வேண்டிய முக்ய கார்யமென்று நாம் நினைக்கிறோம். அப்படி ப்ரயத்னப்பட்டால், நமது ஆசாரங்கள் சிற்சில விடங்களிலாவது பீஜ பூதங்களாக ஸம்ரக்ஷிக்கப்பட்டு வரும். நாம் நமது தத்வார்த்தத்தை இழந்தாலும் இழக்கலாம்; நமது ஸதாசாரங்களை இழக்க ஸர்வதா அநர்ஹர்களே என்பது நம்முடைய நம்பிக்கை.

ஸதாசாரவிஹீநாநாம் தத்வஜ்ஞாநம் கிம் கரிஷ்யதி ।
பரிபக்வபலைஃ கோடீயத்தோப்யவஸ்ருதஸ்ய வேதஸஃ ॥

---